வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 19.02.2024 திங்கட்கிழமை | இதழ் : 50 | பக்கங்கள் : 12

# யாழ்ப்பாணம் - தமிழகம் படகு சேவை இன்னும் சில நாட்களில் ஆரம்பமாகும்!



## யாழிலிருந்து விடைபெற்று செல்லும் இந்திய துணைத்தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 15

யாழ்ப்பாணம் - தமிழகம் (காங்கேசன்துறை - நாகபட்டினம்) படகு சேவை இன்னும் சில நாட்களில் மீளவும் ஆரம்பிக்கப்படும். இதே போன்று யாழ்ப்பாணம் - சென்னை இடையே விமான சேவையை மற்றொரு விமான சேவை நிறுவனமும் விரைவில் ஆரம்பிக்கும் - இது தொடர்பில் பேச்சுகள் நடக்கின்றன என்று யாழ்ப்பாணத்தில் தனது சேவையை நிறைவு செய்து செல்லும் இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் தெரிவித்துள்ளார்.

11

*யாழ்ப்பாணத்தில்*

## போதைப்பொருள் சார் குற்றங்கள் இரு மாதங்களில் 250 வழக்குகள்!

*யாழ்ப்பாணம், பெப். 19*

போதைப்பொருள் கடத்தல், விற்பனை என அதனுடன் தொடர்புடைய சுமார் 250 வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களில் கடந்த இரு மாதங்களில் மட்டும் இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 2023 டிசெம்பரில் ஆரம்பித்த யுக்திய நடவடிக்கை மூலமாக இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## யாழ். போதனா மருத்துவமனையில் 91 சிறுமிகள் குழந்தை பிரசவித்தனர்

*யாழ்ப்பாணம், பெப். 19*

யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டில் 91 சிறுமிகள் குழந்தைகளை பிரசவித்தனர் என்று மருத்துவமனை தரவுகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக சிறுமிகள் கர்ப்பம் தரிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்த நிலையிலேயே இந்தத் தரவும் வெளியாகியுள்ளது.

91 பிரசவங்களும் கடந்த 2023 ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் நிகழ்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேர்தல்கள் குறித்து பேச கட்சிகளுக்கு அழைப்பு!

### தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்தது

*கொழும்பு, பெப். 19*

நாட்டில் வரவுள்ள தேர்தல்கள் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் அரசியல் கட்சிகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் வாரத்தில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளது.

இதன்படி, பதிவு செய்யப்பட்டுள்ள 80 அரசியல் கட்சிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட கட்சி களின் பிரதிநிதிகள் தேர்தல் ஆணைக்குழு

11

## பாராளுமன்றை கலைத்து தேர்தலை நடத்தத் திட்டம்?

*கொழும்பு, பெப். 19*

பாராளுமன்றத்தை ஏப்ரல் மாதத்தின் இரண்டாம் வாரத்தில் கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்ல ஜனாதிபதி ரணில் தீர்மானித்துள்ளார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கமைய ஜூலை நடுப்பகுதியில் தேர்தலை நடத்த எதிர் பார்க்கப்படுகின்றது.

நாட்டின் அரசியல் நிலைமை தொடர்பில் அரச புலனாய்வுத்துறை வழங்கிய தகவல்களின் அடிப்ப டையில் ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள் ளார். இதேபோல்

11

## நிறைவேற்று அதிகாரத்தை இலகுவாக நீக்க முடியாது!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

*கொழும்பு, பெப். 19*

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு குறுகிய வழிமுறைகள் எதுவும் இல்லை. இது இந்த நாட்டின் மக்களுக்கு நன்கு தெரியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பணிமனையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அவரை சந்தித்தபோது எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே மேற்கண்டவாறு கூறினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் ஜனாதிபதி பணிமனை வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தல் உரிய நேரத்தில் இடம் பெறும் இந்தக் காலப்பகுதியில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீக்கப்படாது. ஜனாதிபதி தேர்தலை பிற்போடும் எனக்கில்லை என்பதை நான் பல தடவை தெரிவித்துள்ளேன். அதற்கான நிதிகள் உள்ளன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி

11

## 300 ஏக்கர் காணிகளை விடுவிக்கும் படைகள்!

*யாழ்ப்பாணம், பெப். 19*

வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து 300 ஏக்கர் விவசாய நிலத்தை தமது கட்டுப்பாட்டிலிருந்து விடுவிப்பதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குட்பட்ட வலிகாமம் வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டில் விடுவிக்கப்படாமல் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஒரு மாத காலத்துக்குள் சாதகமான பதிலை வழங்குமாறு இராணுவத்தினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு

11

## தமிழ் அரசின் மத்திய குழுவினர் கிளிநொச்சியில் கூடுகின்றனர்!

*கிளிநொச்சி, பெப். 19*

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தேசிய மாநாட்டு விவகாரம் சட்டச் சிக்கலை எதிர்கொண்டுள்ள நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் கிளிநொச்சியில் கூடவுள்ளனர். எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது.

கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவதற்கு திருகோணமலை, யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றங்கள் தற்காலிக தடையை கடந்த வியாழக்கிழமை விதித்தன.

இந்த நிலையில், வரும் வெள்ளிக்கிழமை

11

## வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் 7 ஆலயங்களில் வழிபாட்டுக்கு அனுமதி!

யாழ்ப்பாணம், பெப். 19

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள 21 ஆலயங்களில் ஏழு ஆலயங்களுக்கு மக்கள் சென்று வழிபாடு நடத்த இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது.

பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயம் உள்ளிட்ட 7 ஆலயங்களுக்கு பொதுமக்கள் சில கட்டுப்பாடுகளை பின்பற்றி வழிபாட்டில் ஈடுபட முடியும் என்றும் இராணுவம் தெரிவித்துள்ளது.

ஆலய வழிபாடுகளுக்கு செல்ல விரும்புவோர் தமது பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் என்பவற்றை ஆலய நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்குமாறும் அந்த விவரங்களை ஆலயங்களின் நிர்வாகங்கள் மாவட்ட செயலகம், பிரதேச செயலகத்திடம் வழங்க வேண்டும்.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளை இராணுவத்தினர் மட்டுமே மேற்கொள்வர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தனியார் மயமாகும் அரச நிறுவனங்கள் மகாநாயக்க தேரர்கள் கூட்டாக எதிர்ப்பு

கொழும்பு, பெப். 19

“பொதுவாழ்க்கையை சீர்குலைக்கும் மற்றும் மக்கள் நலனை நிச்சயமற்ற நிலைக்கு தள்ளும் வகையிலும், தேசிய பாதுகாப்பு தொடர்பில் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையிலுமான தீர்மானங்களை எடுப்பதை தவிர்த்து, அரச நிறுவனங்களை முறையான மறுசீரமைப்பு நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டும்“ என மகாநாயக்க தேரர்கள் கூட்டாக கையெழுத்து ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

பொது வளங்களை தனியார்மயமாக்குவதால் பொதுச் சேவைகள் வீழ்ச்சியடைந்து சமூக பாதுகாப்பின்மையை உருவாக்கும் அபாயம் பற்றியது என்ற தலைப்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த கடிதத்தில் அஸ்கிரிய, மல்வத்து மகாநாயக்கர்கள், இலங்கை ராமஞ்ஞ நிக்காய மகாநாயக்கர், அமரபுர பிரிவின் தலைவர் உள்ளிட்ட இலங்கையின்

11

# இப்படியும் நடக்கிறது

இந்தப் பத்தியில் நேற்றைய தினம் மூத்த ஊடகர் வீரகத்தி தனபாலசிங்கம் தனது 'எக்ஸ்' தளத்தில் எழுதியிருந்த பதிவு ஒன்று பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

ஊர்க்குருவியின் அந்தப் பதிவுக்கு அவர் நேற்று அனுப்பியிருந்த பதில் இதே பக்கத்தில் தனியாக பிரசுரமாகியிருக் கின்றது. அதனைப் படித்துவிட்டு மீண் டும் இந்தப் பத்தியைப் படிப்பதுதான் பொருத்தமானதாக இருக்கும். அதனை இங்கேயே தந்துவிட்டு ஊர்க்குருவி தனது பதிலையும் இங்கே பதிவு செய்வ தெனில் அந்தப் பத்தி சற்று நீண்டுவிடும்.

தங்களின் உரிமை போராட்டத்தை உருப்படியான முறையில் அடுத்த கட்டத் துக்கு நகர்த்துவதற்கு விவேகமும் வலிமையும் தமிழ் அரசு கட்சிக்கு இருக்கி றது என்று தமிழ் மக்கள் இன்னமும் நம்பு கிறார்களா? என்று அவர் எழுப்பியிருந்த கேள்விக்கு,

'சம்பந்தன், சுமந்திரன் அன்ட் கோ தமிழரசு கட்சியை வழிநடத்தியபோது எனக்கு வராத சந்தேகம் இப்போது ஏன் வந்தது என்று ஊர்க்குருவி கேள்வியும் எழுப்பியிருந்தது. அவர்கள் கட்சியை வழிநடத்தியபோது உரிமைப் போராட் டத்தை அடுத்த கட்டத்துக்கு ஒழுங்காக நகர்த்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது என்று ஊர்க்குருவிக்கு யார் சொன்னார்களோ தெரியவில்லை என்று பதிலளித்திருக்கிறார்.

அவர்கள் அவ்வாறு வழிநடத்திய போது இதுபோன்ற பதிவுகள் எதனையும் அவர் வெளியிட்டதாக அறியவில்லை என்பதாலேயே அந்தக் கேள்வியை கேட்கவேண்டிவந்தது.

அவர் அப்படியொரு கேள்வியை இந்தப் பதினைந்து வருடங்களில் எப்போ தாவது கேட்டிருந்தால் இவ்வாறு கேள்வி எழுப்பியது ஊர்க்குருவியின் தவறுதான். அவருக்கு நம்பிக்கை இருக்கவில்லை என்றால் இன்றுபோல அப்போது ஏன் அதனை கேள்விக்கு உட்படுத்தவில்லை என்பதையும் அல்லது எப்போதாவது கேள்விக்கு உட்படுத்தியிருந்தால் அதுபற்றியும் அவர் சொல்லியிருக்கலாம்.

இப்போது அவர் தான் எழுதியதாகக் கூறியிருக்கும் மற்றுமொரு பதிவு பற்றி யும் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்.

"எக்ஸ் தளத்தில் இன்னொரு பதிவை யும் நான் செய்திருந்தேன். நீதிமன்றங் களில் இருக்கும் வழக்குகளை வாபஸ் பெறுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு தமிழ் மக்கள் குறிப்பாக அவர்கள் மத்தி யில் இருக்கக்கூடிய சிவில் சமூகத் தலை வர்கள் மற்றும் கருத்துருவாக்கிகள் தமிழ் அரசு கட்சியின் மூத்த தலைவர்களுக்கு நெருக்குதலைக் கொடுக்கவேண்டும். அத்துடன், தற்போது கட்சியின் அணிக ளுக்கிடையில் மூண்டிருக்கும் வக்கிரத் தன்மையுடனான குரோதங்கள் தணிவ தற்கு வசதியாக தற்போதைக்கு ஏகமன தாக ஒரு தலைவரை பொதுச்சபை தெரிவு செய்யவேண்டும். சிறீதரனும் சுமந்திர னும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அமைதியாக இருக்கவேண்டும் என்பதே அந்த பதிவு. அதை ஊர்க்குருவி பார்க்க வில்லைபோலும் என்றும் அவர் கேட்டி ருக்கிறார்.

கடந்த வருடம் டான் தொலைக்காட்சி நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றில் இரண்டு அணிகள் விளையாடின. போட்டி முடிவடைந்ததும் தோல்வி அடைந்த அணி ஒரு முறைப்பாட்டை முன்வைத்தது. அவர்களை எதிர்த்து ஆடிய அணியின் வீரர் ஒருவர் வேறு அணியிலும் விளையாடுகிறார் என்பதால் அந்தப் போட்டியில் தாமே வெற்றி பெற்றதாக அறிவிக்கவேண்டும் என்று. இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தின் 'சட்டத்தில்' எதிரணியில் விளையாடு கின்ற வீரர்கள் பற்றிய முறைப்பாடு இருந்தால் போட்டி முடிவடைந்த பின் னரும் தெரிவிக்கலாம் என்று இருந்தால், தாங்கள் போட்டி முடிவடையும்வரை காத்திருந்ததாக முறைப்பாடு செய்தவர் கள் தெரிவித்திருந்தனர். இதிலும் நகைச்சுவை, அந்த முறைப்பாட்டை போட்டி தொடங்குவதற்கு முன்னரே எழுதியும் வைத்திருந்தனர். அப்படி முதலில் முறைப்பாடு செய்திருந்தால் அவர்கள் அந்த வீரருக்கு பதிலாக வேறு வீரரை விளையாட அனுமதித்திருப்பார் கள். ஆனால், அவர்களோ அப்படி செய்யாமல் விளையாடி முடிந்த பின்னர் முறையிட்டார்கள். அப்படி செய்ததற்கு காரணம், வென்றால் முறையிடாமலே விடலாம். வெல்லவில்லை என்றால், முறைப்பாட்டைச் செய்து தாங்கள் வெல்லலாம் என்பதே.

இந்த சம்பவம்தான் இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது. வழக்கை வாபஸ் பெறுமாறு சிவில் சமூக தலை வர்களும் கருத்துருவாக்கிகளும் நெருக்கு தலை கொடுக்கவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான். காரணம், வழக்குகளில் ஒன்று கட்சியின் யாப்புக்கு முரணாக பொதுச் சபையில் பலர் இடம் பெற்றிருந்தனர் என்ற குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தவர், அதனைத் தெரிந்துகொண்டே வாக்க ளித்த ஒருவர் என்பது கவனிக்கவேண் டியது. அவர் அப்போது தனது விருப்பத் துக்குரிய தலைவர் வெற்றிபெறுவார் என்ற நம்பிக்கையில் இருந்திருக்கலாம்.

அடுத்து, சிறீதரனும் சுமந்திரனும் அமைதியாக இருந்துகொண்டு தற்போ தைக்கு ஒருவரை ஏகமனதாக தலைவராக தெரிவுசெய்யவேண்டும் என்கிறார் நண்பர்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் தான் வெற்றிபெறுவதற்காக சிறீதரனின் ஆத ரவை கேட்டு பெற்றபோதே சிறீதரனை தலைவராக்குவதாக அல்லது அவர் தலை வராவதற்கு தனது ஆதரவை வழங்குவ தாக கூறியவர் சுமந்திரன். இதனை சிறீதரன் பல தடவை கூறியிருக்கிறார்.


ஆனால், இப்போது தனது வாக்கு றுதியை மீறி இத்தனை நெருக்கடிகளும் கட்சியில் ஏற்படுவதற்கு யார் காரணம் என்பது இரகசியமான ஒன்றல்ல. இப்படி இருக்கையில் இருவரும் அமைதியாக ஒதுங்கவேண்டும் என்பது ஏற்புடைய தாக தெரியவில்லை.

இன்னுமொரு விடயமும் நாம் கவனிக்கவேண்டியது கட்சிக்குள் சூழ்ச்சி கள் நடக்கின்றன என்று சம்பந்தனே சொன்னபின்னர், அந்த சூழ்ச்சிக்காரர் களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்காமல் விட்டால் அது கட்சிக்குள் புற்றுநோய்போல வளரவே செய்யும். கடைசியில் கட்சியே இல்லாமல் போய்விடலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, புதிய தலைவரை பொதுச்சபை தெரிவு செய்வதெனில், வழக்குகள் முடிய வேண்டும். அதுசரி, இரண்டு அணிகளும் ஏற்றுக்கொள்ளும் ஒரு தலைவரை கட்சிக்குள் தேடமுடியும் என்று நண்பர் வீரகத்தி நம்புவதுதான் புரியவில்லை. கட்சியின் பெருந்தலைவர்கூட இந்த கயிறிழுப்பில் ஒர் அணியின் வெற்றிக்காக கடுமையாக உழைத்தாரெனக் கட்சி வட்டாரங்கள் மட்டுமன்றி வெளியிலும் நம்பப்படும் நிலையில் அப்படியொரு தலைவரை ஏகமனதாக தெரிவுசெய்யக் கூடிய நிலையிலா இன்று தமிழ் அரசு இருக்கின்றது?

**- ஊர்க்குருவி.**

## கோட்டாவின் கதி மீண்டும் ஏற்பட வாய்ப்பு



கொழும்பு, பெப். 19

இலங்கையில் ஒன்றை சொல்லி விட்டு இந்தியாவுக்குச் சென்று இன்னொன்றைக் கூறுப வர்களின் கொள்கை யில் சிக்கல் இருக்கிறது. அனுபவமில்லாதவர் களிடம் நாட்டை ஒப்ப டைத்தால், அதிகாரம் வழங்கப்பட்ட கோட் டாபய ராஜபக்‌ஷவின் கதியே மீண்டும் ஏற்பட வாய்ப்புள்ளது - இவ் வாறு வண. தம்பர அமில தேரர் தெரிவித் துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி யின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமை யில் நடைபெற்ற பிக்கு கள் ஆலோசனைக் கூட் டத்தில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

தம்பர அமில தேரர் மக்கள் விடுதலை முன் னணியுடன் (ஜே. வி. பி) மிக நெருக்கமாக செயல்பட்டு பின் னர் அதிலிருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மோசடி செய்த இளைஞர் கைது

கொழும்பு, பெப். 19

சுங்கப் பரிசோதகர் பதவிக்கு ஆட்களை இணைத் துக்கொள்வ தற்காக அநுராதபுர பாடசாலை ஒன்றில் நடைபெற்ற பரீட் சைக்கு ஆள் மாறாட் டம் செய்து, போலி ஆவணங்களுடன் பரீட்சைக்குத் தோற்ற முனைந்தவரை பொலி ஸார் கைது செய்துள்ள னர்.

இகிரிகொல்லாவ பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளை ஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பாடசாலை யில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுங்கத் திணைக்களத்தின் 2ஆம் தர சுங்க பரிசோதகர் பதவிக்கான ஆட்சேர்ப் புக்கான திறந்த போட் டிப் பரீட்சைக்கு இவர் தோற்றவிருந்தார்.

கைது செய்யப்பட் டவர் பரீட்சைக்கு தோற்றவிருந்த சட்ட பூர்வ விண்ணப்பதார ரின் உறவினர் என பொலிஸார் தெரிவித்த னர். (ஐ)

# ஊர்க்குருவிக்கு பதில்!

"இலங்கை தமிழ் அரசு கட்சிக்குள் தோன்றி யிருக்கும் பிரச்னைகளின் விளைவான நீதி மன்ற வழக்குகள் ஒருபுறம் இருக்கட்டும். தங்களின் உரிமைப் போராட்டத்தை உருப்படி யான முறையில் அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கு விவேகமும் வலிமையும் அந்தக் கட்சிக்கு இருக்கிறது என்று தமிழ் மக்கள் இன்னமும் நம்புகிறார்களா? என்று கேட்டு நான் 'எக்ஸ்' சமூக ஊடகத்தில் செய்த பதிவு குறித்து ஊர்க்குருவி நேற்று கருத்து வெளியிட்டிருந்தது.

"சம்பந்தன் அன்ட் சுமந்திரன் அன்ட் கோ தமிழ் அரசு கட்சியை வழிநடத்தியபோது எனக்கு வராத சந்தேகம் இப்போது ஏன் வந் தது என்று ஊர்க்குருவி கேள்வியும் எழுப்பியி ருந்தது. அவர்கள் கட்சியை வழிநடத்திய போது உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு ஒழுங்காக நகர்த்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது என்று ஊர்க்குரு விக்கு யார் சொன்னார்களோ தெரிய வில்லை.

"உண்மையைச் சொல்கிறேன். மிதவாத தமிழ்த் தலைவர்களும் சரி பிறகு போராட் டத்தை தங்கள் கைளில் எடுத்துக்கொண்ட ஆயுதப் போராட்ட இயக்கத் தலைவர்களும் சரி கடைப்பிடித்த கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகள் குறித்து என்னிடம் வலு வான விமர்சனங்கள் இருந்தன. அது வேறு விடயம்.

"ஆனால், தற்போதைய தமிழ் அரசு கட்சிக் கும் அதன் தலைவர்களுக்கும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத் துக்கு நகர்த்தக்கூடிய விவேகமும் வலிமையும் இருக்கிறதா என்ற கேள்வியை நான் எழுப்பிய தற்குக் காரணம் போர் முடிவுக்கு வந்து பதினைந்து வருடங்கள் கடந்த பின்னரும்கூட தமிழர்களில் பெரும்பாலானவர்கள் பெரும் மனிதாபிமானப் பிரச்னைகளை எதிர்நோக்கு கின்ற நிலையிலும் அதைப் பற்றி அக்கறை இல்லாமல் பதவிகளுக்கு சண்டை பிடிக்கிறார் களே என்ற கவலையில்தானே அன்றி வேறு ஒன்றுக்கும் இல்லை.

"எக்ஸ் தளத்தில் இன்னொரு பதிவையும் நான் செய்திருந்தேன். நீதிமன்றங்களில் இருக் கும் வழக்குகளை வாபஸ் பெறுமாறு சம்பந்தப் பட்டவர்களுக்கு தமிழ் மக்கள் குறிப்பாக அவர்கள் மத்தியில் இருக்கக்கூடிய சிவில் சமூகத் தலைவர்கள் மற்றும் கருத்துருவாக்கி கள் தமிழ் அரசு கட்சியின் மூத்த தலைவர்க ளுக்கு நெருக்குதலைக் கொடுக்கவேண்டும். அத்துடன், தற்போது கட்சியின் அணிகளுக் கிடையில் மூண்டிருக்கும் வக்கிரத் தன்மையு டனான குரோதங்கள் தணிவதற்கு வசதியாக தற்போதைக்கு ஏகமனதாக ஒரு தலைவரை பொதுச்சபை தெரிவு செய்யவேண்டும். சிறீதர னும் சுமந்திரனும் ஒரு குறிப்பிட்ட காலத் துக்கு அமைதியாக இருக்கவேண்டும் என்பதே அந்தப் பதிவு. அதை ஊர்க்குருவி பார்க்க வில்லைப்போலும்.

எனது பதிவுக்கு பதில் அளித்த இந்திய அமைதி காக்கும் படையின் முன்னாள் புல னாய்வு தலைவர் கேணல் ஹரிகரன் தமிழ் அரசு கட்சி இன்று 'குழப்பங்களின் சேர்க்கை யாக' இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். அவர் எனது பதிவுக்கு பதில் அனுப்பினார் என்ற பரவசத்தில் நான் இதைக் கூறுவதாக ஊர்க் குருவி நினைக்காது என்று நம்புகிறேன். அவர் கூறியது உண்மையே.

"கட்சியின் தலைவரை ஏகமனதாகவே தெரிவு செய்யும் பாரம்பரியத்தை தந்தை செல்வா ஏன் உறுதியாகக் கடைப்பிடித்து வந் தார் என்பது இப்போது எல்லோருக்கும் புரி யும். தலைவர் பதவிக்கு அந்த ஆனானப்பட்ட அமிர்தலிங்கமும் இராசதுரையும் போட்டி போடத் தலைப்பட்டபோது அவர்களை சாதுரியமாகக் கையாண்ட தந்தை செல்வா எங்கே இன்று எல்லோரையும் அடிபடவிட்டு பார்த்துக் கொண்டிருக்கும் சம்பந்தரும் மாவையும் எங்கே?"

**- வீரகத்தி தனபாலசிங்கம்**

ஈழநாடு
Eelanadu
19.02.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், மாசி 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தூதுவரின் கவலையின் பின்னுள்ள உண்மை

இந்தியத் தூதுவர் வடக்கு பயணத்தின்போது தமிழ் கட்சிகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட சிவில் சமூக பிரதிநிதிகளையும் சந்தித்திருந்தார். வழமைபோன்றுதான் விடயங்கள் பேசப்பட்டாலும்கூட ஒரு முக்கியமான விடயத்தைத் தூதுவர் பகிர்ந்து கொண்டிருக்கின்றார் - அதாவது, தமிழ்க் கட்சிகள் மத்தியிலான பிளவு வருத்தமளிப்பதாகவும் மேலும் தமிழ்க் கட்சிகள் பிளவுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கின்றார். தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை தொடர்பில் இந்திய இராஜதந்திரிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றனர். ஆனால், இதனை கேட்டும், கேட்காத மாதிரியே தமிழ்க் கட்சிகள் நடந்து கொள்கின்றன.

இந்தியத் தூதுவர் ஏன் அவ்வாறு கூறுகின்றார் - இந்திய இராஜதந்திரிகள் ஏன் அவ்வாறு கூறுகின்றனர் - தமிழ்க் கட்சிகள் பிளவுபடுவது தொடர்பில் ஏன் இந்தியா கவலைப்பட வேண்டும்? உண்மையில் தமிழ்க் கட்சிகள் தொடர்பில் இந்தியா கவலைப்பட வேண்டியதில்லை - ஒரு பிராந்திய சக்தியென்னும் வகையில் அதன் பிராந்திய நலன்களை பேணிப்பாதுகாப்பது எவ்வாறு - என்று அவர்கள் அறிவார்கள் - ஆனாலும் தமிழ்க் கட்சிகள் பிளவுபட்டுவிட்டன - மேலும் பிளவுபட்டு விடக்கூடாதென்னும் கவலை வெளியிடுவதற்கு பின்னால் ஒரு காரணம் உண்டு - அதாவது, தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் இந்தியாவின் தலையீட்டை தமிழ்க் கட்சிகள் கோருகின்றன.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட நாடு என்னும் வகையில் இந்தியாவுக்கு அந்தப் பொறுப்பு உண்டு என்றும் கூறுகின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், இந்தியா தமிழ்க் கட்சிகளின் பிளவு தொடர்பில் கவலைப்படுகின்றது - ஏனெனில், அன்றைய அரசியல் சூழலில். இந்தியா நேரடியான தலையீட்டை செய்தது - இதன் காரணமாகத் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒரு நேர்கோட்டில் சந்திக்க வேண்டியிருந்தது - அந்த அடிப்படையிலேயே திம்பு பேச்சில் ஒரு குரலில் பேசின. இதன் விளைவாகவே இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கான வாய்ப்பு கனிந்தது. அன்று அனைத்து கட்சிகளும் திம்புவில் சந்திக்காது இருந்திருந்தால், இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கான வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும்.

ஆனால், இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்குப் பின்னரான சூழலில் தமிழ்க் கட்சிகள் ஓரணியில் சங்கமிக்கவில்லை - அந்த ஒப்பந்தத்தை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வதில் உறுதியான செயல்பாடுகளில் ஈடுபடவில்லை - தங்களுக்குள் மோதிக் கொண்டன. இறுதியில் இந்தியாவை இலங்கை அரசாங்கத்தோடு இணைந்து வெளியேற்றும் நிலைக்கு நிலைமைகள் சென்றன. 2006இல் பாலசிங்கமே இது தொடர்பில் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியிருக்கின்றார்.

விடுதலை புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னரான சூழலில் மீண்டும் தமிழ்க் கட்சிகள் இந்தியாவின் உதவியை நாடின - நாடிக் கொண்டிருக்கின்றன. ஆனால், நிலைமைகள் அதிகம் மாற்றமடைந்துவிட்டன. இவ்வாறானதொரு சூழலில்தான் தமிழ்க் கட்சிகள் இந்தியாவை நெருங்கும் விடயத்தில் தங்களுக்குள் ஒன்றுபட வேண்டியிருக்கின்றது. அப்போதுதான், இந்தியா தமிழர் விடயத்தில் ஆக்கபூர்வமான ஈடுபாட்டைக் காண்பிக்க முடியும். இப்போது பந்து தமிழ்க் கட்சிகளின் பக்கத்தில்தான் இருக்கின்றது.

இந்த அப்படையில்தான் தமிழ்க் கட்சிகளின் ஒன்றுமை தொடர்பில் இந்தியா கரிசனை கொண்டிருக்கின்றது. இந்தியாவின் கரிசனை என்பது அடிப்படையில், இந்தியாவை அணுகுவதானால் ஒற்றுமை அவசியம் - அந்த ஒற்றுமை தொடர்பிலேயே இந்தியத் தூதுவர் தனது கவலையை வெளியிட்டிருக்கின்றார். ஒரு வெளிநாடு தமிழ் கட்சிகளின் ஒற்றுமை தொடர்பில் கவலைப்படுகின்றது - ஆனால், அதனை செவிமடுக்கக் கூடிய நிலையில் தமிழ்க் கட்சிகள் இல்லையே - என்பதுதான் தமிழ் மக்கள் கவலைப்பட வேண்டிய விடயமாகும்.

*கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா*

# 90 இலட்சம் ரூபாய் தேவை; கிடைத்தது ரூ. 10 இலட்சமே!



### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 19

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவுக்கு உத்தேச செலவீனமாக 90 இலட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்ட நிலையில், 10 இலட்சம் ரூபாயே திணைக்களங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட செயலர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், பயணிகளிடம் ஒருவழி படகுப் பயண கட்டணமாக ஆயிரத்து 500 ரூபாய் பணம் அறவிடப்படவுள்ளது. அத்துடன், யாத்திரிகர்கள் இம்முறை தமக்கு தேவையான உணவை தாமே கொண்டு வர வேண்டும் எனவும் பல்வேறு அறிவு றுத்தல்கள் யாழ். மாவட்ட செயலகத்தால் விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்திய துணைத்தூதரகம் நிதி பங்களிப்புக்களை வழங்கி வந்த நிலையில் அதைப் பற்றி தூதரகம் இதுவரையில் எந்தவொரு தகவலையும் எமக்கு அளிக்கவில்லை - என்றும் கூறினார்.

கச்சதீவு திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், இலங்கையில் இருந்து 4 ஆயிரம் பக்தர்களும் இந்தியாவில் இருந்து 4 ஆயிரம் பக்தர்களும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## குருபூசை தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், பெப். 19

சைவ பரிபாலன சபை நடத்தும் புண்ணிய நாச்சியம்மையார் குருபூசை தினமும் சைவநெறி தேர்வு பரிசளிப்பு நிகழ்வும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகள் யாழ்ப்பாணம், நீராவியடி, இல. 66 கல்லூரி வீதியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவ பரிபாலன சபை தலைவர் உ. தயானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இதில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பட்டதாரி கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் செ. கண்ணதாசன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழகம் இந்து கற்கைகள் பீட பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஐ)

## பௌர்ணமி ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், பெப். 19

சிகரம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ். ஆரோக்கிய சதுக்கம் பௌர்ணமி ஒன்றுகூடல் நிகழ்வை பண்ணை சுற்றுவட்ட நடைபாதையில் நடத்துகிறது.

வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆதரவுடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில்,

பொதுவான உடல், உள ஆரோக்கியத்துக்கான யோகாசன பயிற்சிகள், நோய் பாதிப்புகளிலிருந்து விடுபட உதவும் சிறப்பு யோகாசன பயிற்சிகள், நோயற்ற வாழ்வுக்கான ஆரோக்கிய உணவு வகைகள் அறிமுகமும் சுவைபட தயாரிக்கும் வழிமுறைகளும், சித்த ஆயுள்வேத மருத்துவ சிகிச்சை நிபுணத்துவ ஆலோசனைகள், மனவள மேம்பாட்டுக்கான சிறப்பு ஆலோசனை வழிகாட்டல்கள் என்பன முன்னெடுக்கப்படவுள்ளன. (ஐ)

## புதிதாக வாகனங்களை பதிவு செய்தோர் கவனத்துக்கு


யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள பணிமனைக்கு தலைமை பணிமனையிலிருந்து வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதிதாக வாகனங்களை பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத் தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (ஸ்ரிக்கர்) என்பவற்றையும் யாழ். மாவட்ட வாகனப் போக்குவரத்து பணிமனையில் குறிப்பிடப்பட்ட திகதியில் சமர்ப்பித்து தங்களுக்குரிய வாகனத் தகடுகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகன இலக்கத் தகடுகளின் பட்டியலை யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து பணிமனையிலும் சகல பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலக இணையத்தளத்திலும் பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**பெப்ரவரி - 19 திங்கட்கிழமை**
**சோபகிருது வருடம் - மாசி 07**
**நல்ல நேரம் : 12.32 - 02.02**
**ராகு காலம் : 08.02 - 09.32**
**திதி : தசமி**

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கடந்த 2 நாட்களாக இருந்தமன உளைச்சல் நீங்கி மன அமைதிகிட்டும். குடும்பத்தில் நிம்மதி பிறக்கும். வரவேண்டிய பணம் கைக்குவரும். விலகிச் சென்ற உறவினர்கள்வலிய வந்து பேசுவார்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் மேற்பார்வையிலேயே முடிப்பது நல்லது. குடும்பத்தில் உள்ள சண்டை சச்சரவுகள் நீங்கும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள்.

**மிதுனம்**
எதிர்காலம் பற்றிய க்வலைகள் வந்து நீங்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். உடல் அசதி சோர்வு வந்து விலகும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக் கூடும். பிள்ளைகள் பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவாரகள். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**சிம்மம்**
உணர்ச்சிப்பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுபூர்வமாக பேசுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர் நண்பர்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக்கொள்வீர்கள். முயற்சி பலிதமாகும் நாள்.

**கன்னி**
கடந்த 2 நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். எதிர்பார்த்த தடையின்றி முடியும். செலவுகளை குறைக்க திட்ட மிடுவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களுடன் போராட வேண்டி இருக்கும்.

**விருட்சிகம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும்.

**தனுசு**
உற்சாகமாக இருப்பீர்கள். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள் வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும்.

**மகரம்**
குடும்பத்தில் உங்கள் கைஓங்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் நிறைவேற்றுவீர்கள்

**கும்பம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். சொத்துப் பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்.

# புலிகள் அமைப்பை மீள் உருவாக்க முயற்சி திரைத்துறை கலைஞர்மீது வழக்கு பதிவு!

சென்னை, பெப். 19

இந்தியாவில் விடுதலை புலிகள் அமைப்பை மீண்டும் உயிர்ப்பிக்கும் நோக்கில் போதைப் பொருட்கள் விற்பனை, ஹவாலா பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்ட திரைப்பட கலைஞரின் முன்னாள் உதவியாளர் மீது என். ஐ. ஏ. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

கேரள மாநிலம் விழிஞ்சம் கடற்கரை பகுதியில் கடந்த 2021ஆம்ஆண்டு 300 கிலோ ஹெரோயின் போதைப் பொருள், 5 ஏ. கே. 47 துப்பாக்கிகள், பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட 1000 தோட்டாக்களை கண்காணிப்பு பணியில் ஈடுபட்ட கடலோர காவல் படையினர் கைப்பற்றினர். முதல்கட்ட விசாரணைக்கு பிறகு, போதைப்பொருள் கடத்தல் வழக்கில் இலங்கையை சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டனர். பின்னர் வழக்கு விசாரணை தேசிய புலனாய்வு முகமையான என். ஐ. ஏவுக்கு மாற்றப்பட்டது.

என். ஐ. ஏ. கொச்சி அதிகாரிகள் விசாரணையில், விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீண்டும் வலுப்படுத்தும் நோக்கில் போதைப் பொருட்கள், ஆயுதக்கடத்தல் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து, இந்த வழக்கில் இலங்கைத் தமிழர்கள் உட்பட 13 பேரை என். ஐ. ஏ. கைது செய்து, கடந்த ஆண்டு ஜூன் 15ஆம் திகதி சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

அதில், ‘இவர்கள் அனைவரும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பயங்கரவாத செயல்களுக்கு திட்டமிட்டிருந்ததும், இந்திய பெருங்கடல் வழியாக போதைப் பொருட்கள் கடத்தலில் ஈடுபட்டனரெனவும்’ தெரிவிக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து, என். ஐ. ஏ. அதிகாரிகள் நடத்திய விசாரணையில், இந்த வழக்கில் திரைப்பட நடிகை ஒருவரின் முன்னாள் உதவியாளர் சென்னையை சேர்ந்த ஆதிலிங்கத்துக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறி, 14ஆவது நபராக அவரை கைதுசெய்து அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

இந்நிலையில், ஆதிலிங்கம் மீது பூந்தமல்லி என். ஐ. ஏ. சிறப்பு நீதிமன்றத்தில் அதிகாரிகள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர். இது குறித்து என். ஐ. ஏ. வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

இந்த வழக்கில் 16 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில்,14ஆவது நபராக ஆதிலிங்கம்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. போதைப் பொருட்கள் மற்றும் ஆயுதங்களை சட்டவிரோதமாக மாற்றிக் கொடுக்கும் வேலையை இவர் செய்ததாகத் தெரிகிறது. மேலும், போதைப் பொருட்கள் விற்பனை மூலம் பெறப்படும் பணத்தை, ஹவாலா முறையில் மாற்றம் செய்யும் முகவராகவும் ஆதிலிங்கம் செயல்பட்டுள்ளார்.

இந்தப் பணம் விடுதலை புலிகள் இயக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. தமிழ் திரைப்படத் துறையில் தயாரிப்பு நிர்வாகத்தில் பணி புரிந்தபோது, இலங்கையை சேர்ந்த குணசேகரன், அவரின் மகன் திலீபன் உட்பட விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்பு கொண்டு இரகசியமாக செயல்பட்டு வந்திருக்கிறார் - என்றார்.

(ஐ)

இந்திய மீனவர்களுக்கு சிறை

# கண்டித்து இராமேஸ்வரத்தில் கறுப்பு கொடி கட்டி போராட்டம்!

இராமேஸ்வரம், பெப். 19

இராமேஸ்வரம் மீன்பிடி விசைப்படகுகளில் நேற்று கறுப்பு கொடி கட்டி மீனவர்கள் போராட்டம் மேற்கொண்டனர்.

எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என்று கைது செய்யப்பட்ட 3 மீனவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமையை கண்டித்து இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



இந்நிலையில், மீனவர்கள் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதமாக இராமேஸ்வரம் மீன் பிடித்து துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள சுமார் 800இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் கறுப்பு கொடியேற்றி நேற்று போராட்டம் நடத்தினர்.

(ஐ)

# அணை கட்டும் கர்நாடக அரசு வேடிக்கை பார்க்கிறது தமிழகம்!

## பன்னீர், பழனிசாமி குற்றச்சாட்டு

சென்னை, பெப். 19

காவிரியில் மேகதாது அணை கட்ட, கர்நாடக அரசு வரவு - செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கியதற்கும் கர்நாடக காங்கிரஸ் அரசின் செயல்களை வேடிக்கை பார்க்கும் தி. மு. க., அரசுக்கும் அ. தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி, முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம், ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

**அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி:**

கர்நாடக பட்ஜெட்டில், காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டி, குடிநீர் திட்டத்தை செயல்படுத்த, ஒரு தனி திட்டப்பிரிவு மற்றும் இரண்டு உட்பிரிவுகள் அமைக்கப்பட்டு உள்ளன. உயர் அதிகாரிகளிடம் தேவையான அனுமதிகளைப் பெற்று, பணிகளை விரைந்து துவக்க, முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

கருணாநிதி, சர்க்காரியா விசாரணை குழு மற்றும் நடவடிக்கைக்கு பயந்து, கர்நாடகா காவிரியின் குறுக்கே அணைகள் கட்ட அனுமதித்து, தமிழக மக்களை வஞ்சித்ததைப் போல இன்று முதல்வர் கர்நாடகாவில் தங்கள் குடும்பத் தொழில் பாதிக்கப்படுமோ என்றும், கூட்டணி காங்கிரஸ் உறவுக்காக, தமிழகத்துக்கு மீண்டும் ஒரு துரோகத்தை அரங்கேற்ற நினைக்கிறார்.

தமிழகத்திற்கு துரோகம் செய்யத் துணியும், கர்நாடக காங்கிரஸ் அரசையும், கைகட்டி வேடிக்கை பார்க்கும், மத்திய, மாநில அரசுகளையும் கண்டித்து, விவசாயிகள் மற்றும் பொதுமக்களை திரட்டி அ.தி.மு.க., அறப்போராட்டத்தை முன்னெடுக்கும் - என்றார்.

**முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம்:**

கர்நாடக அரசின் அறிவிப்பு, உச்ச நீதிமன்ற தீர்ப்பை அவமதிப்பதோடு, தமிழகத்தின் உரிமையை பறிக்கும் செயலாகும். எனவே, முதல்வர் ஸ்டாலின், கர்நாடக முதல்வரிடம் தனக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தி, மேகதாது அணை கட்டும் திட்டத்தை கைவிட வலியுறுத்த வேண்டும் - என்றார்.

(ஐ)

# பொலிஸ் அதிகார ஒழிப்பை அனுமதிக்கவே மாட்டோம்!

## அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

கொழும்பு, பெப். 19

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரத்தை இல்லாமல் செய்வதற்கு அனுமதிக்க முடியாது. அரசமைப்பின் 13ஆம் திருத்தம் ஊடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் தக்கவைக்கப்பட வேண்டும். அத்துடன், மேலதிக அதிகாரங்களை மாகாணங்களுக்கு பெறும் நோக்கிலேயே ஈ. பி. டி. பி. தொடர்ச்சியாக உறுதியுடன் செயல்பட்டு வருகிறது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரத்தை மீளப்பெறுவதற்காக உதய கம்மன்பில பாராளுமன்றில் சமர்ப்பித்த அரசமைப்பு திருத்தத்திற்கான தனிநபர் பிரேரணை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "அரசியல் ரீதியான நோக்கங்களுக்காக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவால் இந்த தனிநபர் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. இது பாராளுமன்ற விவாதத்துக்கு எடுக்கப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் நிறையப் படிமுறைகளை தாண்டி வரவேண்டியிருக்கின்றது. தற்போதைக்கு அது சாத்தியமில்லை என்றே கருதுகின்றேன்.

ஒருவேளை, இந்த முயற்சி தொடர்ந்தும் முன்னகருமாக இருந்தால், நாம் உருவாக்கி வைத்துள்ள தேசிய நல்லிணக்கத்தைப் பயன்படுத்தி, அதனை தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்" என்று தெரிவித்தார். (ஐ)

# யாழ். இந்திய துணை தூதரகம் நாளை முற்றுகையிடப்படும்!

**யாழ்ப்பாணம், பெப். 19**

**யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தை நாளை செவ்வாய்க்கிழமை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த யாழ்.மாவட்ட கடற்றொழில் அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.**



நேற்று ஞாயிற்றுக்கிழமை மயிலிட்டி கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இதனை தெரிவித்தனர்.

மேலும், இந்திய இழுவைப் படகுகளின் வரவு அதிகரித்துள்ளது. நேற்றிரவும் (நேற்றுமுன்தினம் இரவு) இந்திய இழுவை படகுகளால் எமது மீனவர்களின் வலைகள் அறுக்கப்பட்டன.

இது தொடர்ந்து சில நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்த போதிலும் அதனை யாரும் செவிமடுப்பதில்லை.

இது தொடர்ந்து நடந்தால் யாரையும் நடமாட விடமாட்டோம். அரசாங்கம் எங்களை மோத விட்டு வேடிக்கை பார்க்கிறது. மேலும், இத்தியா தனது கடற்படையை எல்லையில் போட்டால் அவர்களின் ட்றோலர் இங்கு வராது. எனவே, இந்திய ட்றோலர்களை எல்லை தாண்டுவதை கண்டித்து யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரகம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு முற்றுகையிடப்படும் - என்றனர். (ஐ)

# முற்றவெளியில் வான்படையின் வானூர்தி - பராசூட் சாகச நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்ப்பாணம் முற்றவெளியில் வான்படையினரின் ஏற்பாட்டில் வானூர்தி - பரா சூட் சாகசம் நடைபெறவுள்ளது.

இதில், இந்திய வான்படையின் உலங்குவானூர்திகளும் பங்கேற்கவுள்ளன.

இலங்கை வான்படையின் 73ஆவது ஆண்டு நிறைவுவிழா எதிர்வரும் மார்ச் 2ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இந்த ஆண்டு வடக்கு மாகாணத்தை முன்னிலைப்படுத்தி 'நட்பின் சிறகுகள்' எனும் வான்படை சமூக சேவை அமைப்பின் ஊடாக பல்வேறு சமூக திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

இதில் ஓர் அங்கமாக வடக்கு மாகாணத்தில் 73 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு 10 கோடி ரூபாய் செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன், தொழில்நுட்பக் கல்வி கண்காட்சி மற்றும் திருவிழா நிகழ்வுகள் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் மார்ச் 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இதன் போது பரசூட் சாகசங்கள், வான்படையின் வானூர்தி சாகசங்கள் மற்றும் வானூர்தி கண்காட்சிகள், வான்படை மோப்பநாய்களின் சாகச நிகழ்வுகள், பொழுதுபோக்கு நிகழ்வுகள் மற்றும் "ட்ரோன்" வானூர்திகளின் நிகழ்வுகள், மற்றும் தற்காப்புக்கலை மற்றும் அடிமுறை சண்டை காட்சிகள் உட்பட இந்திய வானூர்திப்படையின் உலங்கு வானூர்தி சாகச நிகழ்வுகளும் அடங்கலாக கலாசார நிகழ்வுகளும் இரவு நேர இசை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ஐ)



# ஒட்டுசுட்டானில் கண்காட்சி

முல்லைத்தீவு, பெப். 19

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கிராம அபிவிருத்திக் கிளையின் ஒழுங்குபடுத்தலின் கீழ், வட மாகாண கிராம அபிவிருத்தித் பணிமனையின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மகளிர் நிலையத்தின் மனைப் பொருளியலும் கைவேலைக்குமான கண்காட்சியும் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கூழாமுறிப்பு பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் திருமதி ஜெயராணி பரமோதயன் பிரதம விருந்தினராகவும் வட மாகாண கிராம அபிவிருத்தித் பணிமனையின் அதிகாரிகள், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் கு. திருக்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

தையல் மற்றும் கைவினைப் பொருட்கள் பயிற்சியை நிறைவு செய்த பெண்களின் தையல் மற்றும் கைவினைப் பொருட்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. மிகவும் அழகான முறையில் வடிவமைக்கப்பட்ட பொருட்களைப் பார்வையாளர்கள் ஆர்வத்துடன் பார்த்ததுடன் அவற்றை வாங்கியும் சென்றனர்.

இறுதியாக உருவாக்கும் கலைகளில் பயிற்சியை நிறைவு செய்த பெண்களுக்கான மதிப்பளிப்பும் அவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டதோடு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றன. (ஐ)

# உடுப்பிட்டி மதுபான சாலைக்கு எதிராக நீதிமன்றை நாட முடிவு

வடமராட்சி, பெப். 19

மக்களின் எதிர்ப்பை மீறி மீண்டும் திறக்கப்பட்ட உடுப்பிட்டி மதுபானசாலை மூட உத்தரவிடுமாறு கோரி நீதிமன்றத்தை நாடுவதற்கு உடுப்பிட்டி சமூக மட்ட அமைப்புகள் தீர்மானித்துள்ளன.

மக்களின் எதிர்ப்பால் பூட்டப்பட்ட மதுபான சாலைக்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் அனுமதியை வழங்க சிபாரிசு செய்தார் என்று சொல்லப்படும் பின்னணியில் மக்களின் எதிர்ப்பையும் மீறி மீண்டும் மதுபான சாலைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்த மதுபான சாலையை மூட வலியுறுத்தி எதிராக கடையடைப்பு, பெரியளவிலான கண்டன ஆர்ப்பாட்டங்கள் மக்களால் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் மக்களின் கோரிக்கையை எந்தவோர் அதிகாரிகளும் கவனத்தில் கொள்ளாததால் ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் ஊடாக நீதிமன்றத்தை நாட சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளார்கள்.



இது தொடர்பில், சுமந்திரன் எம். பி. மற்றும் சமூகமட்ட அமைப்புகள் நேற்று முன்தினம் உடுப்பிட்டி வீரகத்தி விநாயகர் சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது.

இந்தநிலையில் மதுபான சாலைக்கு எதிராக அடுத்துவரும் சில நாட்களில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

ஏற்கனவே, பிரதேச சபையால் இந்த மதுபான சாலைக்கு எதிராக மற்றொரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# விபத்தில் படுகாயமடைந்த வர்த்தகர் உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம், பெப். 19

அம்புலன்ஸூடன் மோதுண்டு சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

வடமராட்சி அல்வாயை சேர்ந்த சண்முகதாஸ் தர்மதாஸ் (வயது 54) என்ற வர்த்தகரே நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர், யாழ்.நகரில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வருகிறார். தனது வழக்கமான பணிகளை முடித்து விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பியபோது, ஆனைப்பந்தி சந்திக்கு அண்மையாக அம்புலன்ஸூடன் மோதுண்டு விபத்துக்கு உள்ளானார்.

விபத்தில் படுகாயமடைந்த அவர், யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஐ-02)

# கிளிநொச்சியில் நாளை போராட்டம்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

கிளிநொச்சி,பெப்.19

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்கு சர்வதேச நீதி வேண்டி நாளை செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு அனைவரையும் ஆதரவு வழங்குமாறு வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத் தலைவி யோகராசா கனகரஞ்சினி அழைப்பு விடுத்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் நிறைவடைந்து எட்டு ஆண்டுகள் ஆகின்றன. எங்களுடைய பிள்ளைகளுக்கு இலங்கை அரசாங்கம் நீதி வழங்காது, சர்வதேசத்திடம் நீதியை வேண்டி நிற்கின்றோம். இதற்காகவே நாளைய போராட்டம் நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தமிழ் அரசு கட்சியின் பதவிகளுக்கு மீளவும் தேர்தல் நடத்துவதற்கு தயார்!

## சிறீதரன் எம். பி. அறிவிப்பு



கொழும்பு, பெப். 19

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பதவி உட்பட கட்சியின் அனைத்துப் பதவிகளுக்கான புதிய தெரிவுகள் அனைத்தையும் மீள நடத்துவதற்கு தயாராக உள்ளேன் என்று அந்தக் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு உள்ளிட்ட தெரிவுகளுக்கு எதிராகவும் இன்றைய தினம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 17ஆவது தேசிய மாநாட்டுக்கு எதிராகவும் திருகோணமலை, யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை அடுத்து இடைக்கால கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அடுத்தகட்டமாக எவ்விதமான செயல்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்பது தொடர்பில் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

75வருட கால அரசியல் பாரம்பரியத்தைக் கொண்ட தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக தற்போது வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, தொடுக்கப்பட்ட வழக்குகள் தொடர்பில் நீதிமன்றத்தின் ஊடாக கட்சி அதனை முறையாக கையாள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதேநேரம், கட்சியின் நிருவாகம் தொடர்பில் புதிய தெரிவுகள் இடம்பெற்றுள்ளமையானது யாப்பு விதிகளுக்கு முரணானது என்றும் கூறப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரையில், எனது தலைமைத் தெரிவு உட்பட கட்சியின் அனைத்து பதவி நிலைகளுக்கான புதிய தெரிவுகளையும் மீளவும் செய்வதற்கு நான் தயாராகவே உள்ளேன்.

விசேடமாக கட்சியின் மூலக்கிளை தெரிவுகளில் இருந்து அனைத்தும் மீள நடைபெறுவதாக இருந்தால் கூட அதனை ஏற்றுக்கொள்வதில் எனக்கு எவ்விதமான பிரச்னைகளும் இல்லை. மேலும், தற்போது புதிய தெரிவுகள் சம்பந்தமான விடயங்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பிலேயே தங்கியுள்ளன. ஆகவே, நீதிமன்றத்தின் தீர்மானித்தைப் பின்பற்றுவதற்கும் நான் தயாராக உள்ளேன்.

விசேடமாக, நீதிமன்றம் தெரிவுகள் தவறாக இருக்கின்றன என்று தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டுமாக இருந்தால் நீதிமன்றத்தின் மேற்பார்வையுடன் அதனை மீளச் செய்வதில் எமக்கு எந்தப் பிரச்னையும் இல்லை.

எவ்வாறாயினும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் பல சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த சூழ்ச்சிகள் பற்றி புரிதல்களும் எமக்கு தெளிவாக உள்ளன. எனவே, அனைத்துத் தடைகளையும் முறையாக கையாண்டு அவற்றை கடந்து எமது பாரம்பரிய அரசியல் கட்சியின் செயல்பாடுகளை முன்னெடுப்பதற்காக தற்போது செயல்பட்டு வருகின்றோம் - என்றார். (ஐ)

# சமாதான நீதவான் பதவி வகிக்க சாதாரண தர சித்தி போதுமானது

## நீதி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, பெப். 19

சமாதான நீதவான் பதவி வகிக்க க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைய வேண்டும் என்ற நிபந்தனை க. பொ. த. சாதாரண தரமாக குறைக்கப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ கடந்த நவம்பர் 27ஆம் திகதி வெளியிட்ட சிறப்பு அரசிதழில் சமாதான நீதவான் நியமனத்துக்கான கல்வித் தகைமை மூன்று உயர்தரப் பாடங்களாக இருக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த விதியை திருத்தியமைத்து, கடந்த 13ஆம் திகதி மற்றுமொரு சிறப்பு அரசிதழ் அறிவிப்பை வெளியிட்ட நீதித்துறை அமைச்சர், க.பொ.த சாதாரண தர பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேல் இல்லாது ஆறு பாடங்களில் 'சி' தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளார்.

அப்படியிருந்தும், ஒருவருக்கு அந்தத் தகுதி இல்லாவிட்டாலும் ஒரு புகழ்பெற்ற மதத் தலைவரோ அல்லது ஒரு சங்கத் தலைவரோ அவர் சமூகத்துக்கு செய்யும் முன்மாதிரியான சேவையைக் கருத்தில் கொண்டு சமாதான நீதவானாக நியமிக்கத் தகுதியானவர் என்று பரிந்துரைத்தால், நீதி அமைச்சர் பரிசீலித்து அந்த நபரை சமாதான நீதவானாக நியமிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 30இற்கும் மேற்பட்ட இடங்களில் கைவரிசை காட்டியவர்கள் கைது!

வவுனியா, பெப். 19

வவுனியாவில் பல்வேறு இடங்களில் 30இற்கும் மேற்பட்ட திருட்டுக்களில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருட்டு சம்பவம் ஒன்று தொடர்பில் பூவரசங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இருவரும் வவுனியாவில் பல்வேறு இடங்களில் நீர் இறைக்கும் இயந்திரங்கள், குழாய் கிணற்று நீர்பம்பிகள், எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் மின்விசிறிகள் போன்ற பல்வேறு வகையான பொருட்களை திருடியுள்ளனர் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ஐ)

# மின்சார கட்டண குறைப்பு மீளாய்வை சமர்ப்பிக்குக!

## மின்சார சபைக்கு ஆணைக்குழு உத்தரவு

கொழும்பு, பெப். 19

மின்சார கட்டண குறைப்பு தொடர்பான பிரேரணை மீளாய்வு செய்து சமர்ப்பிக்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளது.

திருத்தப்பட்ட பிரேரணையை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவிடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்தார்.

கடந்த 15 ஆம் திகதி மின்சார கட்டணத் திருத்தம் தொடர்பில் இடம்பெற்ற மக்கள் கருத்துகளை கேட்டறியும் நடவடிக்கையின் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்போது, சுமார் 40 பேர் தமது யோசனைகளை சமர்ப்பித்த நிலையில், இலங்கை மின்சார சபையால் மேற்கொள்ளப்பட்ட கட்டண குறைப்பு வீதத்தை விடவும் அதிக வீதத்தில் கட்டணக் குறைப்பை மேற்கொள்ள வேண்டுமென அவர்கள் வலியுறுத்தினர்.

இந்த விடயங்கள் அனைத்தையும் பரிசீலித்து, மின்சார சபையால் முன்வைக்கப்பட்ட யோசனையை மீள்பரிசீலனை செய்து திருத்தம் செய்ய வேண்டுமென பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்போதைய மின்சார கட்டணத்தை 20 முதல் 25 வீதம் வரை குறைக்க முடியும் என இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையால் முன்மொழியப்பட்ட மின் கட்டண திருத்தம் மற்றும் இலங்கை மின்சார சபையின் அண்மைய நிதிநிலை அறிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையிலான மீளாய்வின் பிரகாரம் அவர்கள் இதனை தெரிவித்துள்ளனர். (ஐ)

# செம்மலை முதல் கொக்கிளாய் வரை இல்மனைட் அகழ அனுமதிக்க முடியாது!

## சார்ள்ஸ் எம். பி. கடும் எதிர்ப்பு



முல்லைத்தீவு, பெப். 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை தொடக்கம் கொக்கிளாய் வரையான கடற்கரையோரத்தில் இல்மனைட் அழகழ்வதற்கு முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி கோரப்பட்ட நிலையில், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் கடுமையான எதிர்ப்பையடுத்து குறித்த அனுமதியை அபிவிருத்திக்குழு நிராகரிப்பதாகத் தீர்மானித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோதே குறித்த இல்மனைட் அகழ்வுக்கான அனுமதி கோரப்பட்டது. இந்நிலையிலேயே குறித்த அனுமதி இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளது.

செம்மலை தொடக்கம் கொக்கிளாய் வரையில் இல்மனைட் அகழ்ந்தால் அருகே உள்ள வயல் நிலங்களும் பாதிக்கப்படுமெனவும் செம்மலை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உவர்நீர்த் தடுப்பணையும் சேதப்படுத்தப்படுமெனவும் பெரும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் இதன்போது சார்ள்ஸ் நிர்மலநாதனால் சுட்டிக்காட்டப்பட்டது.

மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு அனுமதி வழங்காத விடயத்தை, மத்திய அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாதெனவும், செம்மலை தொடக்கம் கொக்கிளாய் வரை இல்மனைட் அகழ்வதற்கு ஒருபோதும் அனுமதிக்கமுடியாதெனவும் சார்ள்ஸ் நிர்மலநாதன் இதன் போது கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டார்.

இதனையடுத்து முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழு இந்த அனுமதிக் கோரிக்கையை நிராகரிப்பதாக முடிவெடுத்ததுடன், இல்மனைட் அகழ்வால் ஏற்படும் பாதிப்பு நிலையைச் சுட்டிக்காட்டி உரியவர்களுக்கு அறிக்கை அனுப்புவதெனவும் முடிவெடுக்கப்பட்டது. (அ)

# கத்திக்குத்தில் ஒருவர் மரணம்!

சிலாபம், பெப். 19

பிள்ளையின் பிறந்தநாள் நிகழ்வில் சகோதரர்களின் மோதலைத் தடுக்க முயன்றவர் கத்திக்குத்துக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

புத்தளம் - வேப்பமடுவ பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அமித் மதுரங்க (வயது - 32) என்பவரே இவ்வாறு உயிரிழந்தாரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

கத்திக்குத்தில் காயமடைந்த இவர் புத்தளம் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். (ஐ)

# தனது மனைவியின் இரு கால்களையும் வெட்டி துண்டாக்கிய முன்னாள் சிப்பாய்!

கொழும்பு, பெப். 19

குடும்பத் தகராறில் ஆசிரியையான தனது மனைவியின் இரண்டு கால்களையும் கணவர் வெட்டித் துண்டாக்கினார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி - புஸ்ஸ மெடவல பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் பாதிக்கப்பட்ட 34 வயதான பெண் கராப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குடும்பத் தகராறின்போது கணவர் தனது மனைவியின் இரு கால்களையும் வெட்டிவிட்டு வீட்டில் இருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் கைபேசியை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார்.

குறித்த சந்தேக நபர் இராணுவத்தில் பணியாற்றியவர். இவர் 2018ஆம் ஆண்டு முறையற்ற முறையில் வெளியேறியுள்ளார் என்று தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஊழல் ஒப்பந்தகாரர்களை கறுப்பு பட்டியலில் சேர்க்காத நாடு இலங்கை!

## வெரிட்டே றிசேர்ச் அமைப்பு அறிக்கை

கொழும்பு, பெப். 19

**பொதுக் கொள்வனவுகளில் ஊழல் புரிந்த ஒப்பந்தகாரர்களை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதில் தெற்காசிய நாடுகளில் இலங்கை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது என்று வெரிட்டே றிசேர்ச் நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.**

கொள்முதலின்போது ஊழல் மற்றும் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கான சரியான காரணத்தை வெளிப்படுத்தாத நாடாக இலங்கை மாத்திரமே தெற்காசியா நாடுகளிடையே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மருந்து கொள்வனவு உள்ளிட்ட சில விடயங்கள் தவிர, இலங்கையில் அனைத்து பொதுக் கொள்வனவுகளையும் நிர்வகிக்கும், கொள்முதல் வழிகாட்டுதல்களில் (2006 ஆம் ஆண்டின்) உள்ள இடைவெளிகளே இதற்கான காரணம். அத்துடன் ஒப்பந்த நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்த காரர்களை கறுப்பு பட்டியலில் சேர்க்காமை ஏற்கனவே உள்ள விதிமுறைகளுக்கு இணங்காததைக் காட்டுகிறது.

கடனை செலுத்தத் தவறிய ஒப்பந்தகாரர்களை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பது மட்டுமல்லாமல், அவர்களின் பெயர்களை பொது மற்றும் நிகழ்நிலை தரவுத்தளத்தில் வெளியிடவும் இலங்கையில் ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

எனினும், பொது நிதித் துறையால் நிர்வகிக்கப்படும் இந்த தரவுத்தளத்தில் கறுப்பு பட்டியல் குறித்த எவ்வித தரவுகளும் பதிவிடப்பட்டிருக்கவில்லை.

இதேவேளை, 2023ஆம் ஆண்டின் ஜூலை மாத நிலவரப்படி நேபாளத்தின் நிகழ்நிலை தரவுத்தளத்தில் 629 உள்ளீடுகளும், பங்களாதேஷில் 510 பதிவுகளும் காணப்பட்டன.

இந்நிலையில் 2024ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குள் சிறந்த நடைமுறைகளை பிரதிபலிக்கும் பொது கொள்முதல் சட்டத்தை இலங்கையில் இயற்ற வேண்டும் என்பதே சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய பரிந்துரைகளில் ஒன்று. ஊழலை இல்லாதொழித்து நிதி நிர்வாகத்தை மீட்டெடுப்பதற்கு இந்த இடைவெளிகளை விரைவில் நிவர்த்தி செய்வதன் முக்கியத்துவத்தை அறிக்கை வலியுறுத்துகிறது. (ஐ)



# கரட்டின் விலை ரூ. 360ஆக வீழ்ச்சி!

கொழும்பு, பெப். 19

நுவரெலியாவில் 2 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு கிலோ கரட்டின் விலை நேற்று 360 ரூபாயாக குறைந்துள்ளது.

நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ கரட்டின் மொத்த விலை 360 ரூபாயாக வீழ்ச்சியடைந்துள்ளது. அத்துடன், மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்பால் நுகர்வோரின் கொள்வனவு நிலை இன்னும் வழமைக்கு திரும்பாததாலும் கரட் உற்பத்தி அதிகமானதாலும் சந்தையில் கரட்டின் விலை குறைந்துள்ளது.

தற்போது நுவரெலியா மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் சீரான காலநிலை நிலவுவதால், மலையகத்தில் மரக்கறி உற்பத்தி முன்னரை போன்று சிறப்பாக அமைந்துள்ளது.

இந்நிலையில், கிட்டத்தட்ட அனைத்து மரக்கறி வகைகளின் விலைகளும் மலையகத்தில் குறைந்துள்ளது என்று நுவரெலியா பொருளாதார மத்திய நிலைய வட்டாரத்திலிருந்து தகவல் தெரிவிக்கப்படுகிறது.

# யுக்திய நடவடிக்கை 547 பேர் கைது!

கொழும்பு, பெப். 19

யுக்திய விசேட சோதனை நடவடிக்கையில் நேற்று நள்ளிரவு 12.30 மணி வரையான24 மணி நேரத்தில் 547 சந்தேக நகபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

இதில், 417 சந்தேகநபர்கள் போதைப் பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள். ஏனைய 130 பேரும் குற்றப் பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் உள்ளவர்களாவர்.

கைதானவர்களில் 2 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்களில் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் மற்றும் பொலிஸ் விசேட பணியகம் ஆகியவற்றின் பட்டியலில் உள்ளடங்கியிருந்த 8 சந்தேகநபர்களும் அடங்குவர்.

இதேவேளை, கைதானவர்களிடம் இருந்து 132 கிராம் ஹெரோயின், 103 கிராம் ஐஸ் ரக போதைப்பொருள், 7 கிலோ 388 கிராம் கஞ்சா மற்றும் 447 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உண்மையான அரசாங்கத்தை உருவாக்க தேர்தலில் அனைவரும் ஒன்றிணைவோம்!

## சஜித் பிரேமதாஸ அழைப்பு



கொழும்பு, பெப். 19

தேர்தலில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதுடன் நாட்டை கட்டியெழுப்பக்கூடிய உண்மையான அரசாங்கத்தை உருவாக்க முன்வர வேண்டும் - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிக்குகள் ஆலோசனை பேரவையின் மாவட்ட மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு ஏனைய மதங்களுக்கும் பொருத்தமான இடம் வழங்கப்பட வேண்டும் என அரசமைப்பில் கூறப்பட்டுள்ள போதிலும், அது முறையாக இடம்பெறவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கும் அரசாங்கத்தில் சம்புத்த சாசனத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். அறநெறி பாடசாலை பரீட்சைகளைக் கூட நடத்த முடியாத அரசாங்கம் தற்போதுள்ளது.

மிகிந்தலை புனித விகாரையின் மின்சாரத்தை துண்டித்து மகாநாயக்க தேரர்களை ஆட்சியில் உள்ள அவமதித்துள்ளது. குடும்பவாத அரசியல் நாட்டையே அழித்துள்ளது.

பிரிவினைவாத - பயங்கரவாதத்தை தோற்கடித்த பின்னர், அந்த மரியாதை, கௌரவம் முப்படைகளுக்கு செல்ல வேண்டும். ஆனால், அந்த மரியாதையையும் கௌரவத்தையும் ஒரு சில குடும்பங்கள் எடுத்துக் கொண்டன.

அவ்வாறு எடுத்துக் கொண்டு நாட்டின் வளங்களை கொள்ளையடித்து நாட்டில் பொருளாதார பயங்கரவாதத்தை செயல்படுத்தி நாட்டையே அழித்தார்கள். இதன் காரணமாக 9 ஆயிரம் டொலர் மதிப்பிலான கடனில் நாடு மூழ்கியுள்ளது.

தேர்தலில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதுடன் நாட்டை கட்டியெழுப்பக் கூடிய உண்மையான அரசாங்கத்தை உருவாக்க முன்வர வேண்டும் - என்றார். (ஐ)

# சஜித் தவிர்ந்த இரு மர்மநபர்களின் கட்டுப்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தி!

## சம்பிக்க ரணவக்க எம். பி.



கொழும்பு, பெப். 19

ஐக்கிய மக்கள் சக்தி மர்ம நபர்கள் இருவரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க குற்றம்சாட்டியுள்ளார்.

கட்சியின் ஆதரவாளர்கள் கட்சியிலிருந்து விலகிச்செல்லும் நிலையை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ உருவாக்குகின்றார். கட்சியை நாளாந்தம் பலவீனப்படுத்துகின்றார். இதன் காரணமாகவே ஜே. வி. பியால் அதிகளவு மக்கள் ஆதரவை பெற முடிந்துள்ளது.

எதிர்கட்சி தலைவருக்கு அப்பால் வேறு இருவரின் கட்டுப்பாட்டின் கீழ் கட்சி உள்ளது என்பதை நான் தெரிவிக்க வேண்டியுள்ளது. அவர்கள் யார் என்பதை நேரம்வரும் போது வெளியிடுவேன்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது தற்போது குடும்ப வர்த்தகமாக மாறியுள்ளது கட்சிக்குள் கடும் அதிருப்தி நிலவுகின்றது ஜனநாயகம் என்ற எதுவும் கட்சிக்குள் இல்லை - என்றார். (ஐ)

# 470 யானைகள் உயிரிழப்பு 2023ஆம் ஆண்டில் மட்டும்!

கொழும்பு,பெப். 19

2023 ஆம் ஆண்டில் 470 காட்டு யானைகள் உயிரிழந்தன. இவற்றில் 200 யானைகள் மனிதர்களால் கொல்லப்பட்டன - என்று வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் (பாதுகாக்கப்பட்ட பகுதி முகாமைத்துவம்) மஞ்சுள அமரரத்ன தெரிவித்துள்ளார்.

துப்பாக்கியால் சுடப்பட்டு 83 யானைகளும், யானை வெடி களால் 47 யானைகளும், மின்சாரம் தாக்கி 66 யானைகளும், உடம்பில் நஞ்சேற்றம் இடம்பெற்றதால் 4 யானைகளும் உயிரிழந்தன.

மேலும், உடல் நலக் குறைவு, இயற்கை காரணங்கள் அல்லது விபத்துக்களால் 70 யானைகளும், ரயிலில் மோதி 23 யானைகளும் உயிரிழந்தன. கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி அதிகளவான யானை உயிரிழப்புகள் பதிவாகியுள்ளது. ரயிலில் மோதி 11 காட்டு யானைகள் உயிரிழந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.



# போக்குவரத்து விதி மீறல் 793 பேர் அடையாளம்!

கொழும்பு, பெப். 19

கொழும்பு அதனை அண்டிய பகுதிகளில் பொருத்தப்பட்ட சி. சி. ரீ. வி. கமெரா பதிவுகளின்படி கடந்த 15ஆம் திகதி முதல் போக்குவரத்துச் சட்டவிதிகளை மீறிய 793 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறு சுமார் 300 பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பில் கடந்த வருடம் 26 ஆயிரம் வழக்குகள் பதிவாகின என்றும் அவர் கூறினார். (ஐ)

# வெல்லாவெளி, மண்டூரில் காட்டு யானைகள் கூட்டம்

மட்டக்களப்பு, பெப். 19

**மட்டக்களப்பின் வெல்லாவெளி, மண்டூர் பகுதிகளில் காட்டு யானைகள் கூட்டமாக வந்ததால் அந்தப் பகுதிகளின் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தின் போது, பிரதேச செயலாளரின் தலைமையில் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினர், பொலிஸார், பொதுமக்கள் இணைந்து யானைகளை விரட்டும் முயற்சியில் ஈடுபட்டனர்.

யானை வெடிகளை வீசியே இந்த யானைகள் விரட்டப்பட்டன. எனினும், யானைகள் அந்தக் கிராமங்களின் எல்லைப் பகுதியிலுள்ள பற்றைக்காட்டில் தங்கிநின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

மக்கள் தமது குடியிருப்புகளை அண்டியுள்ள பற்றைகளையும், விவசாய நிலங்களை அண்மித்துள்ள வாய்க் கால்களிலுமுள்ள பற்றைகளையும் அவ்வப்போது வெட்டி அகற்றும் பட்சத்தில் கிராமங்களை அண்மித்து காட்டு யானைகள் தங்கி நிற்காமல் வெளியேறிவிடும் எனவே, இது விடயத்தில் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்று வனஜீவரா சிகள் திணைக்களம் மக்களை அறிவுத்தியுள்ளது. (ஐ)

# தன்னாமுனை விபத்து ஒருவர் பலி; மூவர் காயம்!

மட்டக்களப்பு, பெப். 19

தன்னாமுனையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்த நிலையில், மூவர் காயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு - தன்னாமுனை பிரதான வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்த விபத்து இடம்பெற்றது.

முச்சக்கர வண்டியும் லொறியும் மோதியுமே இந்த விபத்து இடம்பெற்றது. இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

காத்தான்குடியை சேர்ந்த நான்கு பேர் முச்சக்கர வண்டியில் ஏறாவூரை நோக்கி பயணித்தனர். அப்போது, தன்னாமுனையில் லொறி ஒன்று முச்சக்கர வண்டியை மோதியது.

இதில், காத்தான்குடி ஷைகுல் பலாஹ் வீதியை சேர்ந்த ரியாஸ் என்பவர் உயிரிழந்தார். அவரன் மனைவி குழந்தை உட்பட 3 பேர் காயமடைந்து மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# திருத்தப்பட வேண்டிய வீதிகள் குறித்து மக்களிடம் கேட்டார் வியாழேந்திரன்!

மட்டக்களப்பு, பெப். 19

மட்டக்களப்பின் மண்டூர் பகுதியில் திருத்தப்பட வேண்டிய வீதிகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மக்களிடம் நேரில் கேட்டறிந்தார்.

கிராமங்களில் மிகவும் அவசியமாக முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய வீதிகளை மக்களிடம் கேட்டறிந்து அந்த வீதிகளையும் பார்வையிட்டுள்ளார்.

புனரமைக்கப்படாத வீதிகள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீதிகளை விரைவில் திருத்துவதற்கு முயற்சிப்பதாக அவர் இதன்போது மக்களுக்கு உறுதியளித்தார். (ஐ)




# கழிவு கடதாசி மீள்சுழற்சி மூலம் மாணவர்களுக்கு உதவும் திட்டம்!

மட்டக்களப்பு, பெப். 19

கழிவுகளாக எறியப்படும் கடதாசிகள், கார்ட்போட் மட்டை களை மீள் சுழற்சிக்காக பயன்படுத்தி, இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கும் செயல் திட்டத்தை லியோ கழகம் முன்னெடுத்துள்ளது.

இந்த செயல்திட்டம் நேற்று முன்தினம் மட்டக்களப்பு நகரில் ஆரம்பமானது.

இந்தநிகழ்வில் மாணவர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என பலர் கழிவு கடதாசிகள், கார்ட்போட் மட்டைகளை கழகத்தினரிடம் கையளித்தனர்.

இதேவேளை, கழிவு கடதாசிகள், கார்ட்போட் அட்டைகளை 076 296 9180, 075 876 8189, 072 051 0948, 075 976 3610 என்ற கைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு கையளிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இலவச ஆயுள்வேத சிகிச்சை முகாம்!

மட்டக்களப்பு, பெப். 19

மதுரங்குளி நல்லாந்தழுவை ஆயுர்வேத மத்திய மருந்தகத்தில் இலவச ஆயுள்வேத சிகிச்சை முகாம் ஆயுள்வேத மத்திய மருந்தகத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

மத்திய மருந்தகத்தின் வைத்தியர் றிழ்வானா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வினை முன்னாள் வட மேல் மாகாண சபை உறுப்பினர் ஏ.எச்.எம். றியாஸ் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்துள்ளார்.

இலவச சிகிச்சை முகாமில் நீரிழிவு, இரத்த அழுத்த பரிசோதனை, நிரை பார்த்தல், ஹிஜாமா, அக்குபஞ்சர் சிகிச்சை, தோல் நோய், குழந்தை நோய்கள் போன்றவற்றுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த வைத்திய முகாமில் சுமார் 200க்கு மேற்பட்ட நோயாளர்கள் கலந்து கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# நிலாவெளியில் 7 கி. மீ. பகுதி சிரமதானம் மூலம் தூய்மை!

திருகோணமலை, பெப். 19

சிரமதானப் பணியின் மூலம் நிலாவெளி கரையோரத்தில் சுமார் 7 கிலோமீற்றர் பகுதி தூய் மைப்படுத்தப்பட்டது.

இந்தப பணியில் அதிகளவான வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலா பயணிகள் ஈடுபட்டனர்.

இந்த சிரமதான பணியை அந்தப் பகுதியிலுள்ள ஹோட்டல்கள், படகு ஓட்டுநர்கள், முச்சக்கரவண்டி சங்கங்கள், கரையோர பாதுகாப்பு திணைக்களம், பொலிஸார், நீச்சல் பாடசாலை என பல அமைப்புகள் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன. இதன்போது, சுமார் 7 கிலோ மீற்றர் தூரம் வரையான கரையோர பகுதிகள் சுத்தம் செய்யப்பட்டன. (ஐ)

# புலமைப்பரிசில் 100 புள்ளிக்குமேல் பெற்றவர்களுக்கு கௌரவிப்பு விழா!



மட்டக்களப்பு, பெப். 19

காத்தான்குடியில் கடந்த ஆண்டு ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் புலமை விழா காத்தான்குடி இஸ்லாமிய வழிகாட்டல் நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 735 மாணவர்கள் பாராட்டப்பட்டு பதக்கம் அணிவிக்கப்பட்டு பரிசில்கள் நினைவுச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பன வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

மாணவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்கள் அதிபர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். தென் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளருமான அ. ஏ. எம். அலியார் ரியாதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பௌசுல் கரீமா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபை தலைவர் மௌலவி ஹாரூன் ரஷாதி உட்பட பலரும் நிகழ்வில் பங்கேற்றனர்.

# சதுரங்கப் போட்டி

மட்டக்களப்பு, பெப். 19

மட்டக்களப்பு சதுரங்க குழுமத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண வீரர்களுக்கான சதுரங்க சுற்றுப்போட்டி நடைபெறுகிறது.

முதல் தடவையாக கிழக்கு மாகாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச ரீதியான தரப்படுத்தலுக்குட்பட்ட 'மேஜர்' தர போட்டியில், இரு பாலாரும் வயது வேறுபாடின்றி பங்குபற்றி வருகின்றனர்.இந்த சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டுவோர், தேசிய நிலையில் நடைபெறவுள்ள போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மாகாண மட்டப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது. (ஐ)

# புலிகள் புதைத்து வைத்த பொருட்கள் மீட்கப்பட்டன!




திருகோணமலை, பெப். 19

விடுதலைப் புலிகள் புதைத்து வைத்தனர் என்று கூறப்படும் ஒரு தொகை உபகரணங்கள் மூதூரில் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை சம்பவ இடத்தை நேரில் ஆய்வு செய்த மூதூர் பொலிஸார் அவற்றை மீட்டுள்ளனர்.

தொலைத தொடர்பு உபகரணங்கள், வானொலிப் பெட்டிகள், கமெராக்கள், டிரோனை இயக்கும் கருவி உள்ளிட்ட பொருட்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)



# இஸ்ரேலின் தாக்குதலில் 40 பலஸ்தீனர்கள் மரணம்!

காஸா, பெப். 19

மத்திய காஸாவில் குடியிருப்புகளின் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 40 பலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர்.

இது தொடர்பில் பலஸ்தீன மருத்துவ துறை வெளியிட்ட அறிக்கையில்,

இஸ்ரேலிய போர் விமானங்கள் மத்திய காஸா பகுதியிலுள்ள நுசிராத், அல்-ஜவைடா மற்றும் டெய்ர் எல்-பலாஹ் ஆகிய பகுதிகளில் பல வீடுகள்மீது தொடர்ச்சியான வன்முறை தாக்குதல்களை நடத்தின. இந்த சம்பவத்தில் பலர் கொல்லப்பட்டனர்.

பலர் இடிபாடுகளுக்கு இடையே சிக்கினர். பலியானவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் டெய்ர் எல்-பலாஹ் நகரில் உள்ள அல்-அக்ஸா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் போர் தொடங்கியதில் இருந்து இதுவரை பலியான பலஸ்தீனியர்களின் எண்ணிக்கை 28 ஆயிரத்து 858 ஆக உயர்ந்துள்ளதாக காஸா சுகாதாரத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

*ஊழல் முறைப்பாடுகள்:*

# போர்த்துக்கல் பிரதமர் இராஜிநாமா பாராளுமன்றமும் கலைக்கப்பட்டது

லிஸ்பன், பெப். 19

ஊழல் முறைப்பாடுகள் காரணமாக போர்த்துக்கல் பிரதமர் அன்ரனியோ கோஸ்டா தனது பதவியை இராஜிநாமா செய்தார். இதையடுத்து பாராளுமன்றத்தை கலைத்துள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி மார்கெலோ ரெபெலோ டி சூஷா தெரிவித்துள்ளார்.

பசுமை ஐதரசன் திட்டம் மற்றும் லித்தியம் சுரங்க ஊழல் தொடர்பாக அவரின் வீட்டில் பொலிஸார் அண்மையில் சோதனை நடத்தினர். இந்த சோதனைகளின் ஒரு கட்டமாக, கோஸ்டாவின் பிரதான ஆலோசகரை பொலிஸார் கைது செய்தனர்.

இதனையடுத்து ஊழல் வழக்கில் கோஸ்டாவிடம் விசாரணைகளை நடத்தினர். இந்த சம்பவங்களை அடுத்து, கோஸ்டா தனது பிரதமர் பதவியை இராஜிநாமா செய்தார்.

எனினும், ஊழல் நடவடிக்கைகளிலோ சட்டவிரோதமான செயல்பாடுகளில் தான் ஈடுபடவில்லை என கோஸ்டா



விளக்கமளித்துள்ளார்.

விசாரணை முடிவுகள் எப்படி இருந்தாலும் மீண்டும் பிரதமர் பதவியை ஏற்பதில்லை எனவும் அவர் முடிவு செய்துள்ளார்.

கோஸ்டாவின் ராஜிநாமாவை ஏற்றதை அடுத்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அத்துடன், எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கான புதிய தேர்தல் நடத்தப்படும் என அந்த நாட்டு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், போத்துக்கலில் சோசலிஸ்டுகள் தலைமையிலான புதிய ஆட்சி அமைய வாய்ப்புள்ளதாக பேசப்பட்டு வருகிறது.

கோஸ்டாவின் ஆட்சியின் கீழ் போர்த்துக்கல் பொருளாதார ரீதியில் துரிதமான அபிவிருத்தியை அடைந்தது. அத்துடன் சுற்றுலாத் துறையும் அபிவிருத்தியடைந்து வருகிறது. இதனால், போர்த்துகல் முதலீட்டாளர்களின் இலக்காக மாறியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாகிஸ்தான் தேர்தலில் முறைகேடு; தேர்தல் ஆணையாளரும் உடந்தை!

## ராவல்பிண்டி தேர்தல் ஆணையர் சாடல்



இஸ்லாமாபாத், பெப். 19

பாராளுமன்ற தேர்தலில் பல முறைகேடுகள் நடைபெறுகின்றன. இதற்கு தலைமை தேர்தல் ஆணையரும் உயர் நீதிமன்ற தலைமை நீதியரசரும் உறுதுணையாக உள்ளனர் - என்று பாகிஸ்தானின் ராவல்பிண்டி தேர்தல் ஆணையர் லியாகத் அலி தெரிவித்துள் ளார்.

கடந்த 8ஆம் திகதி பாகிஸ்தான் பாராளுமன்றத்தின் 266 எம். பிகளுக்கு தேர்தல் நடைபெற்றது. இதுவரை வெளியான முடிவுகளில் இம்ரான் கான் ஆதரவாளர்கள் 93 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளனர். நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் -என் 75 தொகுதிகளிலும், பிலாவல் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி 54 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

இந்த சூழலில் ராவல்பிண்டி தேர்தல் ஆணையர் லியாகத் அலி நேற்றுமுன்தினம் கூறியவை வருமாறு,

பாராளுமன்ற தேர்தலில் பல முறைகேடுகள் நடைபெறுகின்றன. இதற்கு தலைமை தேர்தல் ஆணையரும், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியும் உறுதுணையாக உள்ளனர். பல்வேறு தொகுதிகளில் சுயேச்சை வேட்பாளர்கள் சுமார் 80 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் இருந்தனர். ஆனால், போலி வாக்குச்சீட்டுகள் மூலம் மற்ற கட்சி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்துள்ளனர். இந்த மோசடியை கண்டித்து எனது பதவியை இராஜிநாமா செய்து விட்டேன் - என்றார். (ஐ)

# பலஸ்தீன கைதிகள் இஸ்ரேலால் சித்திரவதை!

காஸா, பெப். 19

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் இஸ்ரேல் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட காஸா மக்கள் சித்திரவதை செய்யப்படுகின்றனர் என்று பலஸ்தீன கைதிகள் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

பலஸ்தீன கைதிகள் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு காஸா ஆளாகி வரும் சூழலில் இஸ்ரேலால் கைது செய்யப்பட்ட காஸா



மக்கள்மீது கொடூரமான குற்றங்கள் நடப்பதாகத் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் முன்னாள் கைதிகளிடமிருந்து பெறப்படும் தகவலின்படி, அவர்கள் கைதிகளை சித்திரவதை செய்கின்றமை நிரூபணமாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது. மேலும், இந்தக் கைதிகளில் பெண்கள், சிறுவர்கள், மருத்துவர்களும் அடங்குவர்.

இதேசமயம், இஸ்ரேல் அதிகாரிகள் இந்தத் தகவலை மறுத்துள்ளனர். அத்துடன், கைதானவர்களின் விவரங்களை வெளியிடவும் இஸ்ரேல் மறுத்துள்ளது. (ஐ)



# உக்ரைனின் நகரம் ரஷ்ய படை வசமானது

கீவ், பெப். 19

கிழக்கு உக்ரைனின் டொனட்ஸ்க் பகுதியில் அமைந்துள்ள அவ்டீவ்கா நகரை ரஷ்ய படையினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைப்பற்றினர்.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து சில நாள்களில் 2 ஆண்டு கள் நிறைவடையும் நிலையில் இந்த வெற்றியை ரஷ்யா பெற்றுள்ளது.

இது குறித்து முகநூலில் உக்ரைன் தளபதி ஒலெக்ஸாண்டர் சிர்ஸ்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது,

ரஷ்ய படையினரின் ஆக்கிரமிப்பிலிருந்து அவ்டீவ்கா நகரைப் பாதுகாத்து வந்த உக்ரைன் படையினர், அந்த நகரிலிருந்து திரும்ப அழைக்கப்பட்டுள்ளனர்.

ரஷ்ய இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டு அதன் விளைவாக உக்ரைன் வீரர்களின் உயிருக்கும், உடல்நலனுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைக்கேற்ற சாதகமான நிலைகளில் உக்ரைன் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

அவ்டீவ்கா நகரில் நமது படையினர் கௌரவத்துடன் சண்டையிட்டு தங்களால் முடிந்த அளவுக்கு ரஷ்ய படையினருக்கு இழப்பை ஏற்படுத்தினர் - என்று குறிப்பிட்டுள்ளார்.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த 2022ஆம் ஆண்டு பெப். 24-ஆம் திகதி படையெடுத்து, டொனட்ஸ்க் உள்ளிட்ட கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைன் பிராந்தியங்களில் கணிசமான பகுதிகளை கைப்பற்றியது. இருந்தாலும், கடந்த சில மாதங்களாக போரில் எந்த முன்னேற்றமும் ஏற்படாமல் இருந்து வந்தது. இந்த நிலையில் போர் தொடங்கி 2 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் அவ்டீவ்கா நகரம் ரஷ்யாவிடம் வீழ்ந்துள்ளது. (ஐ)

# மின்சார விநியோகம் தடைப்படும் அபாயம்!

## இலங்கை மின்சார சபை அறிவிப்பு

### மின்சாரத்தை சிக்கனமாக பயன்டுத்தவும் கோரிக்கை

கொழும்பு, பெப். 19

**நாட்டில் மின்சார விநியோகம் தடைப்படலாம் என்று இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நோயல் பிரியந்த தெரிவித்தார்.**

நாட்டில் தற்போது நில வும் வறட்சியான காலநிலை காரணமாக நீர் மின் உற்பத்தி குறைந்தமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடும் வெப்பம் காரணமாக மின்சார தேவை சடுதியாக அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அனல் மின் உற் பத்தி 63 சத வீதம் வரை அதி கரிக்க வேண்டிய நிலை ஏற் பட்டுள்ளது. நீர்த் தேக்கங் களின் நீர்மட்டத்தை நிர்வ கிக்க வேண்டியது அவசியம் - என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில், மின் சாரத்தை சிக்கனமாக மக்கள் பயன்படுத்த வேண்டும் என் றும் - இலங்கை மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# 60 வீதமான மக்கள் நகைகளை அடகு வைத்தே வாழ்கின்றனர்!

## கர்தினால் மல்கம் ரஞ்சித்



கொழும்பு, பெப். 19

நாட்டில் சுமார் 60 வீதமான மக்கள் தங்களின் நகைகளை அடகு வைத்துள்ளனர் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

தங்களிடமுள்ள ஆபரணங் களை அடகு வைத்தேனும் வாழ்க்கையை கொண்டு நடத்த மக்கள் முயற்சிக்கின்றனர்.

கம்பஹா மிரிஸ்ஸவத்தையி லுள்ள தேவாலயமொன்றில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கைச் செலவுகளை மேற் கொள்ள முடியாது நெருக் கடிக்கு உள்ளாகியுள்ளனர். வாழ்வதற்கு போதியளவு சம்பளம் அல்லது வருமானம் கிடைக்காத காரணத்தால் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நெருக்கடிகளை எதிர் நோக்கி வருகின்றனர் - என் றார். (ஐ)

# ஆண் ஆசிரியர்களை விடவும் ஆசிரியைகள் 3 மடங்கு அதிகம்!

கொழும்பு, பெப். 19

நாடு முழுவதும் உள்ள அரச பாடசாலைகளில் பணிபுரியும் பெண் ஆசிரியைகளின் எண் ணிக்கை ஆண் ஆசிரியர்களின் எண்ணிக்கையையும்விட மூன்று மடங்கு அதிகம் என்று கல்வி அமைச்சு நடத்திய சமீ பத்திய ஆய்வில் தெரியவந் துள்ளது.

நாட்டிலுள்ள அரச பாட சாலைகளில் ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட் சத்து 36 ஆயிரத்து 738. இதில், 56 ஆயிரத்து 817 பேர் ஆண் ஆசிரியர்கள், ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 921 பேர் பெண் ஆசிரியர்களாவர்.

பெண் ஆசிரியைகளின் தொகை 76 சதவீதமாகும் குருநாகல் மாவட்ட சிரேஷ்ட கல்விப் பணிப்பாளர் டபிள்யூ. எம். பாலசூரிய தெரிவித் துள்ளார்.

396 தேசிய பாடசாலை களும் 9,730 மாகாண பாட சாலைகளும் உள்ளடங்கலாக தற்போது 10,126 பாட சாலைகள் இயங்கு நிலையில் உள்ளன. இவற்றில் சுமார் ஆயிரத்து 473 பாடசாலை களில் 50க்கும் குறைவான மாணவர்களே உள்ளனர். 34 பாடசாலைகளில் 4,000 மாணவர்களுக்கும் அதிகமாக உள்ளனர்.

கல்வி அமைச்சு இந்த ஆண் டுக்கான அரசாங்கப் பாட சாலைகளின் தரம் ஒன்றுக்கு புதிய மாணவர்களை பெப்ரவரி 22ஆம் திகதி சேர்த்துக்கொள்ள வுள்ளது. அரசாங்கப் பாட சாலைகளில் தரம் ஒன்றில் சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் சேர்த்துக் கொள் ளப்படுவர் என்றும் அவர் கூறி னார். (ஐ)

# பாடசாலையில் போதையிலிருந்த தரம் 5இல் கற்கும் மாணவர்கள்!

## மருத்துவமனையில் ஆபத்தான கட்டத்தில்

கொழும்பு, பெப். 19

ஆரம்ப பாடசாலை ஒன் றில் தரம் 5 ல் கல்வி கற்கும் 4 மாணவர்கள் போதைப் பொருளை உட்கொண்டதால் மருத்துவமனையில் சேர்க் கப்பட்டுள்ளனர்.

குருநாகல் - மதுராகொட பிரதேசத்தில் உள்ள பாட சாலை ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மருத்துவமனையில் சேர்க் கப்பட்ட மாணவர்களில் ஒரு வர் தனது தந்தை மறைத்து வைத்திருந்த மாத்திரையை பாடசாலைக்கு எடுத்துச் சென்று ஏனைய 3 மாணவர் களுடன் சேர்ந்து பயன்படுத்தி யுள்ளார். இதனால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக குரு நாகல் பொது மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்த னர்.

பாடசாலைக்கு மாத்திரை களை எடுத்துச் சென்ற மாண வனின் தந்தை ஹெரோயின் போதைக்கு அடிமையானவர் எனவும் அவர் மீது போதைப் பொருள் வழக்குகள் நிலுவை யில் உள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவர்களில் ஒருவர் அதிகளவில் குடிபோதையில் இருந்தாரெனவும் அவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் குருநாகல் போதனா மருத்துவமனையின் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# போதைப் பொருளை சிறுவர்களின் முன்பாக பயன்படுத்த வேண்டாம்!

## மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 19

பெற்றோர்களும் பாதுகாவ லர்களும் சிறுவர்கள் முன்னி லையில் மதுபானம் மற்றும் போதைப் பொருட்களை உட் கொள்ளக்கூடாது. போதைப் பொருட்களில் இருந்து சிறுவர் களைப் பாதுகாப்பதில் சமூகம் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமானது என்று சிறுவர் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், போதைப் பொருட்களை சிறுவர்களின் பார்வையில் வைக்கக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

குருநாகல் - மாதுராகொட பகுதியிலுள்ள பாடசாலை ஒன் றில் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்கள் போதை மாத் திரை உட்கொண்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட சம்ப வத்தை அடுத்தே அவர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார். (ஐ)

# பாரம்பரிய அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!

## மௌபிம ஜனதாக கட்சியின் திலீத் ஜெயவீர

கொழும்பு, பெப். 19

பாரம்பரிய அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண் டிய நேரம் வந்துவிட்டது. மௌபிம ஜனதா கட்சியின் எதிர்கால செயல்திட்டங்களை விரைவில் வெளியிடுவேன் என்று அந்தக் கட்சியின் தலை வர் திலீத் ஜெயவீர அறிவித் துள்ளார்.

"எனது பல்கலைகழக வாழ்க் கையின் போதும் அதன் பின்ன ரான காலத்திலும் அபிவி ருத்தியடைந்த நாடே எனது நோக்கமாக காணப்பட்டது", என்று நேற்று கொழும்பில் தனது கட்சியின் அறிமுக நிகழ் வில் உரையாற்றியபோது அவர் தெரிவித்தார்.

மேலும், துரதிர்ஷ்டவசமாக இந்த நோக்கம் இன்னமும் நிறை வேறவில்லை. இதனால் நாங் கள் காணவிரும்பும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக் கைகளை இறுதியாக நாங்கள் ஆரம்பித்துள்ளோம்.

என்னைச் சுற்றியுள்ள அனுப வம்மிக்க அரசியல்வாதிகள் மற்றும் எனக்கு ஆதரவாக வுள்ள குறிப்பிடத்தக்க இளம் தலைமுறையினருடன் இணைந்து நான் அரசியலில் ஈடுபட தீர்மானித்துள்ளேன். நாட்டுக்கு மிகச்சிறந்த பங்க ளிப்பை வழங்குவதே இதன் நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 75 வருடங்களாக அரசியல் நோக்கம் என்ற எது வுமிருக்கவில்லை. அனைவரும் பார்க்கக்கூடிய - அனைவரும் பயன்பெறக்கூடிய மாற்றங் களை கொண்டுவர எண்ணி யுள்ளோம். வரலாற்றுரீதியாக நாங்கள் ஏற்கனவே உள்ள அர சாங்கங்களை மாற்றுவதற்காக புதிய அரசாங்கங்களை பதவி யில் அமர்த்தி வந்துள்ளோம். ஆனால், நாங்கள் வித்தியாச மானவர்கள் புலமைமிக்கவர்க ளுடனான கலந்துரையாடல் கள் கருத்துப்பரிமாற்றங்கள் ஆராய்ச்சிகள் மூலம் அனைத்து இலங்கையர்களின் வாழ்க்கை யிலும் சாதகமான மாற்றங் களை ஏற்படுத்தும் மாற்றங் களை உருவாக்க எண்ணியுள் ளோம் - என்றார். (ஐ)



# கனடா செல்கிறார் அநுரகுமார எம்.பி!

கொழும்பு, பெப். 19

தேசிய மக்கள் சக்தியின் தலை வரும் பாராளுமன்ற உறுப்பின ருமான அநுரகுமார திஸ நாயக்க கனடா செல்லவுள்ளார்.

வரும் மார்ச் மாத இறுதியில் அவர் கனடா செல்லவுள்ளார். அங்குள்ள புலம்பெயர் மக்க ளின் அழைப்பின் பேரிலேயே அநுரகுமார கனடா செல்கிறார் என்று தேசிய மக்கள் சக்தியினர் தெரிவித்தனர்.

அவரின் இந்தப் பயணத்தின் போது, அங்கு அவர் பல பொதுக் கூட்டங்கள் மற்றும் சந்திப்புகளை நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### யுக்திய நடவடிக்கை:

# கைப்பற்றப்பட்ட வாகனங்களை உரிமையாளரிடம் வழங்குங்கள்

## கடுவலை நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, பெப். 19

'யுக்திய' நடவடிக்கையில் பொலிஸாரால் கைப்பற்றப் பட்ட பல வாகனங்களை பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்க ளிடம் ஒப்படைக்குமாறு நீதி மன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

கடுவலை நீதிவான் நீதிமன் றம் இந்த உத்தரவை பிறப்பித் துள்ளார். ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் பெறுமதியான வாகனங்களை ஒப்படைக்கு மாறு குற்றப் புலனாய்வு திணைக் களத்துக்கு அறிவுறுத்தப்பட் டுள்ளது. விசாரணைக்காக வாக னங்களை மேலும் தடுத்து வைக்குமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கையையும் நீதிவான் நிராகரித்துள்ளார்.

வழக்கு விசாரணையின் போது, மேற்படி சொத்துகளை கையகப்படுத்த உயர் நீதிமன் றத்தில் முறையான உத்தரவுகள் பெறப்படவில்லை என பாது காப்பு சபை குற்றம் சாட்டியது.

போதைப்பொருள் தொடர் பான நடவடிக்கைகளை கட் டுப்படுத்தும் நோக்கில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 'யுக் திய' என்ற விசேட நடவடிக்கை பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட் டது என்பது குறிப்பிடத்தக் கது. (ஐ)

## தமிழ் அரசின்...

கிளிநொச்சியில் மத்திய குழு உறுப்பினர்கள் சந்திக்கின்றனர். இந்த சந்திப்பு மத்திய குழு கூட்டமாக அல்லாது உறுப்பினர்களின் சந்திப்பாகவே அமைகிறது. சட்ட ரீதியான பிரச்னைகள் எழலாம் என்பதற்காகவே மத்திய குழுவை உத்தியோகபூர்வ கூட்டமாக அறிவிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தேர்தல்கள்...

தலைவரை அடுத்த வாரம் சந்திக்க உள்ளனர்.

இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதன் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வாய்ப்புள்ளது. மேலும், தேர்தல்கள், வாக்காளர் பதிவு தொடர்பி லான பிரச்னைகள் குறித்தும் இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது.

இந்த சந்திப்பு எதிர்வரும் 27 அல்லது மார்ச் 6ஆம் திகதி நடத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# போதைப்பொருளால் யாழில் இரு மரணங்கள்!

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பாவனையால் இளைஞர்கள் இருவர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் இந்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தெல்லிப்பழை - கொல்லங்கலட்டியில் தனது நண்பருடன் சேர்ந்து ஹெரோயின் போதைப்பொருளை இளைஞர் ஒருவர் உட்கொண்டுள்ளார். பின்னர், நண் பருக்கு தெரியாமல் ஐஸ் போதைப் பொருளையும் உட்கொண்டுள்ளார். அதீத போதைப்பொருள் பாவனையால் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, அந்த இளைஞர் கைபேசியில் தாயாரை தொடர்பு கொண்டு தான் ஆபத்தில் இருப்பதை தெரிவித்துள்ளார். வீட்டுக்கு அருகிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்ற நிலையில், தாயார் உடனடியாக அங்கு சென்றுள்ளார். அதற்குள் இளைஞர் உயிரிழந்துவிட்டார். இந்த சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 26 வயதான இளைஞரே உயிரிழந்தார்.

இதனிடையே போதைப்பொருள் வாங்க பணம் இல்லாததால் 30 வயதான இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். இந்த சம்பவம் மல்லாகத்தில் இடம்பெற்றுள்ளது. போதைப் பொருளுக்கு அடிமையான அவர் போதைப் பொருள் குற்றத்துக்காக சிறையிலும் இருந்தவர் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

## தனியார் மயமாகும்...

பிரதான பௌத்த பீடங்களின் தலைவர்கள் அனைவரும் கையெழுத்திட்டுள்ளனர்.

அந்தக் கடிதத்தில்,

மக்கள் நலன், தேசிய பாதுகாப்பு மற்றும் நாட்டின் பொருளாதார ஸ்திரத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவப்பட்ட அரச நிறுவனங்கள் நாட்டின் பொது வளங்கள் என்பது இரகசியமல்ல. மேற்படி அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கை குறித்து சமூகத்தில் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. அந்த நடைமுறையில் எந்த சம்பிரதாயமும் இல்லை, பொதுமக்களின் கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளுக்கு கவனம் செலுத்தாமல் மறுசீரமைப்பு என்ற போர்வையில் பொது வளங்களை விற்கும் பொறிமுறையானது நடைமுறைப்படுத்தப்பட்டு அதன் மூலம் மக்கள் நலன், தேசிய மற்றும் சமூக பாதுகாப்பு குறித்து கடுமையான நிச்சயமற்ற நிலை ஏற்படும் என்றும் பொதுமக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இலங்கையிலுள்ள பெரும்பான்மையான தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் செயற்பாட்டின் கடந்த 'காலப்பகுதியில்' அரசாங்கத்துக்கு தமது அதிருப்தியை வெளிப்படுத்தியதை நாம் அவதானித்துள்ளோம்.

கடந்த 76 ஆண்டுகளில், தேசிய கொள்கை இல்லாமல் தவறான பொருளாதார உத்திகளின் அடிப்படையில் பல்வேறு அரசுகளின் தன்னிச்சையான மற்றும் சந்தர்ப்பவாத நடவடிக்கைகளால் நாட்டில் பல்வேறு தேசிய, அரசியல், சமூக மற்றும் பொருளாதார நெருக்கடிகள் எழுந்துள்ளன, மேலும் நிலையானதாக ஒரு தேசிய கொள்கை தேவை. அவற்றுக்கான தீர்வுகள் மற்றும் மக்கள் நலன் நோக்கங்கள்.முக்கியத்துவமிக்க அபிவிருத்தித் திட்டத்தின் அவசியத்தை மகாநாயக்கர்களாகிய நாம் பல்வேறு அரசாங்கங்களுக்கு அறிவித்துள்ளோம்.

'அரசியல் தலையீடு, ஆட்சேர்ப்பு, பொது வளங்களை துஷ்பிரயோகம் செய்தல், ஊழல் மற்றும் பொது விவகாரங்களில் மோசடிகளை தடுப்பதற்கு முறையான பொறிமுறையை அமைத்து, அரச நிறுவனத்தை முறையான நிர்வாகத்திற்கு நியமிக்க வேண்டும் என்பது தான் நாட்டின் பொதுக் கருத்து. மக்கள் நலப்பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் துறைகளை முறையாக கண்காணித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால், அரசு வணிகங்களை தனியார்மயமாக்குவதன் மூலம் அந்த நிறுவனத்தை எந்த அளவிற்கு அரசு கட்டுப்பாட்டுக்குள் உட்படுத்த முடியும்? நாட்டில் இயற்கைப் பேரிடர் அல்லது சமூக, பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால் தனியார்மயமாக்கப்பட்ட இத்தகைய நிறுவனங்களின் செயல்பாடு எப்படி இருக்கும்? இப்பிரச்னைகளால் பொதுமக்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

அமைதி, கருணை, கருணை மற்றும் கருணை ஆகிய நற்பண்புகளை மேம்படுத்துவதன் மூலம் மக்களின் நலனுக்காக உழைத்து உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்,

திருட்டு, பயங்கரவாத ஆபத்துகள் போன்றவற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதுடன் அத்தியாவசிய சேவைகளை முறையாகப் பேணுவது ஓர் அரச தலைவரின் முழுமையான கடமை மற்றும் பொறுப்பு என்று சக்கவட்டி சிஹானாத சூத்திரத்தில் புத்தர் பிரசங்கித்தார்.

நாட்டின் பொருளாதார மையங்களான சிறீ லங்கா ரெலிக்கொம் கூட்டுத்தாபனம், மின்சார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்களையும், பொருளாதாரம் மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு பெரும் பங்களிப்பை வழங்கும் அரச வங்கி முறைமையையும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மட்டுமே விற்பனை செய்தல். வணிக இலாபம் எதிர்காலத்தில் நாட்டில் பாரிய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்கும். அது போல் மக்களின் வாழ்க்கையை ஸ்திரமற்றதாக மாற்றும்.

மேலும், நாட்டின் சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி இந்த நேரத்தில் மக்களின் வாழ்க்கையை சீர்குலைப்பதில் வலுவான தாக்கத்தை ஏற்படுத்த முடிந்தது. எனவே, ஜனாதிபதி இந்த விடயங்கள் அனைத்திலும் உடனடி கவனம் செலுத்தி, பொதுவாழ்க்கையை சீர்குலைக்கும் மற்றும் மக்கள் நலனை நிச்சயமற்ற நிலைக்கு தள்ளும் வகையிலும், தேசிய பாதுகாப்பு தொடர்பில் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையிலுமான தீர்மானங்களை எடுப்பதை தவிர்த்து, அரச நிறுவனங்களை முறையான மறுசீரமைப்பு நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டும். பொதுமக்களின் நல்வாழ்வு நிலைநாட்டப்படும் நாட்டின் எதிர்காலத்திற்கு பாதுகாப்பான நம்பிக்கையை வையுங்கள்.அதற்காக உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குமாறு இதன் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

## 300 ஏக்கர்...

கூட்டத்தில் விவசாய காணிகள் விடுவிப்பு, இராணுவ கட்டுப்பாட் டுக்குள் உள்ள ஆலயங்களுக்கு வழிபட அனுமதிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்ட போதே ஜனாதிபதியின் உத்தரவு தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்நிலையில், 300 ஏக்கர் விவசாய நிலம் இராணுவ கட்டுப்பாட்டில் இருந்து விடுவிப்பது குறித்து இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

மேலும் வறுத்தலைவிளான், காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரி வீதி இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன. அத்துடன் பலாலி கிழக்கு பகுதியில் உள்ள காணிகளை விடுவிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ஐ)

## யாழ்ப்பாணம்...

யாழ்ப்பாணத்தில் தனது மூன்று ஆண்டுகள் சேவையை நிறைவு செய்துள்ள இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜூக்கு யாழ். நகரிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் பிரிவுபசார விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்தது. இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு,

யாழ்ப்பாணத்தில் சேவையாற்ற வரும்போது பல திட்டங்களுடனே வந்தேன். அவ்வாறு எண்ணிவந்த பலவற்றை செய்ய முடியவில்லை. கோவிட் தொற்று பரவல் - பொருளாதார பாதிப்பால் பல விடயங்களை முன்னெடுக்க முடியவில்லை. எனினும், பாதிக்கப்பட்ட மக்களுக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் சேவைகளை முன்னெடுத்துள்ளோம்.

எனது காலத்தில், வாரத்தில் 4 முறை என்றிருந்த யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவையை 7 தடவையாக மாற்ற முடிந்தது. இந்த தப் பணியில் என்னுடன் பல அதி காரிகள் பங்காற்றினார்கள். எனக்கு முன்னர் இருந்த தூதுவர்கள் - இங்குள்ள முக்கியஸ்தர்கள் இந்த விடயத்தில் பங்குக்கு உரியவர்கள் அவர்களுக்கு எனது நன்றி.

விரைவில் மற்றொரு தனியார் விமான சேவை நிறுவனமும் யாழ்ப் பாணம் - சென்னை விமான சேவை யில் ஈடுபடும். இது தொடர்பிலான பேச்சுகள் நடைபெற்று வருகின்றன.

இதேபோன்று நிறுத்தப்பட்ட தமிழ்நாடு - காங்கேசன்துறை படகு சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும். வாரக் கணக்கில் அல்ல இன் னும் சில நாட்களில் இது ஆரம்ப மாகிவிடும். இதேபோன்று, இராமேஸ்வரம் - தலைமன்னார் படகு சேவையும் ஓரிரு ஆண்டுகளுக்குள் தொடங்கி விடும். இது தொடர்பில் ஆராயப்பட்டு வரு கின்றது.

தமிழ்நாட்டில் இருந்து மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தில் இருந்தும் கலைஞர்கள் தமிழ்நாடு செல்கிறார்கள். இது எமக்கு மகிழ்ச்சி தருகி றது. யாழ்ப்பாணம் மத்திய கலாசார நிலையத்திலுள்ள வசதிகள் போன்று இலங்கையில் வேறு எங்கும் இல்லை. இது கலைஞர்களுக்கானது - மக்களுக்கானது. இதனை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதியிலிருந்தே கவனித்துக்கொள்ளும் விதமாக சிந்தித்து வருகிறோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## சேலையை தவிர்த்து வேறு உடை அணிந்த ஆசிரியை வெளியேற்றம்!

கொழும்பு, பெப். 19

ஆசிரியர் கலாசாலைக்கு நேற்று ஞாயிறுக்கிழமை சேலை அணியாது வேறு உடையில் வந்ததற்காக ஆசிரியை ஒருவர் வெளியேற்றப்பட்டுள் ளார்.

கண்டி - கிராகம பிரதேசத்தி லுள்ள உள்ள ஆசிரிய கலாசாலை யில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் குறித்த ஆசிரியை கடு கண்ணாவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்றைய தினம் கிராகம ஆசிரிய கலாசாலையில் ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுக்கான தேர்வுக்கு குறித்த ஆசிரியை சேலை அணியாது வேறு உடையில் சென்றிருந்தபோது அங்கிருந்த அதிகாரி ஒருவரால் வெளியேற்றப்பட்டாரென முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கடுகண்ணாவை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## நிறைவேற்று...

முறை நீக்கம் குறித்த கதைகளை எதிர்கட்சியினரே பரப்பிவருகின்றனர்.

எதிர்கட்சியில் பிளவுபட்டுள்ள இரண்டு குழுக்களுக்கு இடையில் மோதல்கள் இடம்பெறுகின்றன. ஒரு குழுவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு உள்ளதாக தெரியவரும்போது பாரம்பரிய எதிர்கட்சி பதற்றமடைகின்றது.

தங்கள் ஊடக நண்பர்களை பயன்படுத்தி அவர்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பு குறித்த தகவல்களை பரப்பினார்கள் எனது பெயரைப் பயன்படுத்தி அவர்கள் இந்த தகவல்களை பரப்புகின்றனர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை அவசரஅவசரமாக முன்னெடுக்க முடியாது என்பது இந்த நாட்டு மக்களுக்கு எதிர்கட்சியினரைவிட நன்கு தெரியும் அதற்கான நடைமுறைகள் உள்ளன நாங்கள் இந்த பொறிக்குள் சிக்கக்கூடாது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீக்கம் குறித்து உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள் பொருளாதார மீட்சி குறித்து பேசுங்கள் - என்றும் ஜனாதிபதி கூறினார். (ஐ)

## பாராளுமன்றை

தேர்தலுக்காக இப்போதே தயாராகுமாறு ஜனாதிபதி ரணில் தனது நெருங்கிய சகாக்களைப் பணித்துள்ளார்.

எதிர்க்கட்சியிலிருந்து ஆளுங் கட்சிக்கு வருவோரை ஏற்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியிலிருந்து அரசியல்வாதிகளைக் கொண்டு வரும் செயல்பாட்டின் முதல் அம்சமாக சில தினங்க ளுக்கு முன்னர் முன்னாள் எம்.பி. ரவி கருணாநாயக்கவின் கொழும்பு இல்லத்தில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் எம். பிக்கள் உட்பட 14 எம்.பிக்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். இதில் ஜனாதிபதி ரணில் கலந்துகொண்டு அரசியல் நிலைமைகளை விளக்கியுள்ளார்.

இதற்கிடையில் ஜனாதிபதி ரணில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான புதிய அரசியல் கூட்டணியை பாராளுமன்றத் தேர்த லில் களமிறக்கவுள்ளதால் சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென் னக்கோன் ஆகியோர் ஏற்கனவே ரணிலுக்கான தமது ஆதரவைப் பகிரங்கமாக தெரிவித்துள்ளனர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பு என்ற கோரிக் கையை முன்வைத்து பொதுத் தேர்தலில் வாக்குக் கோர ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்றும் தெரியவருகின்றது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

டி. ஏ. ரி. கொடுப்பனவு விவகாரம்:

# சுகாதார தொழில் சங்கங்கள் இன்று அமைச்சருடன் பேச்சு!

கொழும்பு, பெப். 19

டி. ஏ. ரி கொடுப்பனவு எனப்படும் போக்குவரத்து உள்ளிட்டவற்றுக்காக வழங்கப்படும் மேலதிக கொடுப்பனவு தொடர்பில் சுகாதார நிபுணர் சங்கங்களுக்கும் சுகாதார அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பத்திரணவுக்கும் இடையே இன்று திங்கட்கிழமை முக்கிய கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலும் தோல்வியடையும் பட்சத்தில் இன்று மாலை வேலைநிறுத்தம் தொடர்பில் தீர்மானம் எடுக்கவுள்ளதாக சுகாதார வல்லுநர் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களில், 72 சுகாதார தொழிற்சங்கங்கள் கடந்த சில வாரங்களில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டன. மருத்துவர்களுக்கு போக்குவரத்து உள்ளிட்டவற்றுக்காக வழங்கப்படும் 35 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

சிவனொளிபாத மலை யாத்திரை:

# வான் - பேருந்து விபத்து பத்து பேர் படுகாயம்!

கொழும்பு, பெப். 19

சிவனொளிபாத மலை யாத்திரைக்குப் பயணித்த வானும் பேருந்தும் நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

கம்பஹாவிலிருந்து யாத்திரிகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற வானும் மாத்தறையிலிருந்து யாத்திரிகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற பேருந்தும் இவ்விபத்தில் சிக்கியுள்ளன.

குறித்த விபத்து நேற்று18ஆம் திகதி பிற்பகல் ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை - மில்லகஹமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் 10 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த இருவர் மேலதிக சிகிச்சைக்காக கினிகத்தேனை மருத்துவமனையிலிருந்து நாவலப்பிட்டி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

வான் முன்னால் சென்ற லொறியை முந்திச் செல்ல முற்பட்ட போது இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். விபத்தில் வானும் பேருந்தும் பலத்த சேதமடைந்துள்ளன. (ஐ)

# ‘பாரத்-லங்கா’ 10,000 வீட்டு திட்டம் மலையகத்தில் இன்று ஆரம்பம்!

கொழும்பு, பெப். 19

மலையகத்துக்கான ‘பாரத் - லங்கா’ எனும் 10ஆயிரம் வீட்டுத் திட்டம் இன்று திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்திய அரசின் நிதி உதவியுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலுடன் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஒருங்கிணைப்பின் கீழ் இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

முதல்கட்டமாக ஆயிரத்து 300 வீடுகளுக்கு ஒரே தடவையில் நிர்மாணப் பணிகளுக்கான அங்குரார்ப் பணம் நடைபெறவுள்ளது. இதன் பணிகளை எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

நுவரெலியா, கண்டி, பதுளை, மாத்தளை, கேகாலை, குருநாகல், இரத்தினபுரி, காலி, களுத்துறை மற்றும் மொனராகலை ஆகிய 10 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் 45 தோட்டங்களில் இன்றைய தினம் நிர்மாணப் பணிகளுக்கான அங்குரார்ப்பண விழா நடைபெறவுள்ளது.

பிரதான நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான், இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா ஆகியோரின் பங்கேற்புடன் நிகழ்நிலை மூலம் இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்படும்.

இதைத் தொடர்ந்து, 45 தோட்டங்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நிகழ்வுகள் நடைபெறும் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். (ஐ)

# 13 நடைமுறைப்படுத்த வலியுறுத்துகிறோம் ஆனால், இலங்கை ஆர்வம் காட்டவில்லை!

## இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா



யாழ்ப்பாணம், பெப். 19

**இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக அமுலாக்குவதோடு 13ஆவது திருத்தச்சட்டத்தையும் நடைமுறைப்படுத்துமாறு எமது நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி உட்பட நாம் அனைவரும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். ஆனால், இலங்கை அரசாங்கம் அதனை ஏற்றுக்கொண்டாலும் நடைமுறையில் ஆர்வம் காண்பிக்கவில்லை என்பதை உணர்கின்றோம் என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் பதவியை ஏற்றுக்கொண்டதன் பின்னர் முதல் தடவையாக வடக்குக்கான பயணத்தை மேற்கொண்டு தனியார் விடுதியில், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும், புத்திஜீவிகளையும் இராப் போசன விருந்துபசாரத்துடன் சந்தித்து உரையாடினார்.

குறித்த சந்திப்பில், பாராளுமன்ற உறுப்பினர்களான சி. வி. விக்னேஸ்வரன், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலாநதன், சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் வட மாகாண அவைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வட மகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி சர்வவேஸ்வரன், யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா, வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் த. மங்களேஸ்வரன், யாழ். மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் உட்பட புத்திஜீவிகளும் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போது அரசியல் மற்றும் சிவில் சமூகத்தினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடத்தில், இலங்கை அரசாங்கத்தின் தமிழ் மக்களை அடக்குமுறைக்குள் வைத்திருக்கும் இலங்கை அரசாங்கத்தின் செயல்பாடுகள் சம்பந்தமாக முதலில் தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக, இந்திய இலங்கை ஒப்பந்தமானது, தமிழ் மக்களையும் அவர்களது பூர்வீகத்தையும் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டதாகும்.

அந்த ஒப்பந்தத்தில் தமிழ் மக்களின் சார்பில் இந்தியாவே கையொப்பமிட்டுள்ளது. எனினும், தற்போது வரையில் அந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை.

அதுமட்டுமன்றி, குறித்த ஒப்பந்தத்தின் பின்னர் அரசமைப்பில் உள்ளீர்க்கப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தையும் அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு காலத்தை இழுத்தடித்து வருகின்றது.

இதேநேரம், மாகாண சபைகளுக்கான தேர்தலைகள் நடத்தப்படாது தற்போது அவை இயங்காத நிலைமைக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளது. ஆகவே இந்தியா இந்த விடயங்களில் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு பெருவாரியாக கைகொடுத்து வருகின்ற நிலையில் அவற்றைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்று குறிப்பிட்டனர்.

இதற்குப் பதிலளித்த, இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, தமிழ் மக்களின் சுதந்திரம், சமத்துவம், சகவாழ்வு சம்பந்தமாக நாம் ஆழமாக கரிசனைகளைக் கொண்டுள்ளோம். எமது பிரதமர் நரேந்திர மோடி, நேரடியாகவே இந்திய இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கையின் தலைவர்களிடத்தில் எடுத்துரைத்துள்ளார்.

அத்துடன், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு நாம், அரசாங்கத்தின் அனைத்துச் சந்திப்புக்களிலும் வலியுறுத்துகின்றோம்.

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதனை மறுதலிக்கவில்லை. ஆனால், அவர்கள் அதனை நடைமுறைப்படுத்துவதில் ஆர்வம் காண்பிக்கவில்லை. எனினும் நாம் தொடர்சியாக அந்த விடயத்தில் கவனம் செலுத்துவோம் - என்றார். (ஐ)

# கட்சியில் இருந்துகொண்டு கேடுகெட்ட வேலை செய்யாதீர்!

## பொன்சேகாவை சாடுகிறார் மரிக்கார்

கொழும்பு, பெப். 19

ரணில் தலைமையிலான கூட்டில் இணைந்து கொள்ள சரத் பொன்சேகா பேச்சு நடத்தவுள்ளதாக தகவல் வெளிவந்துள்ளது. நிலையில் கட்சியில் இருந்து கொண்டு கேடு கெட்டவேலைகளை செய்யவேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியில் இருந்து தம்மை நீக்கும் முயற்சிக்கு எதிராக சரத் பொன்சேகா நீதிமன்றம் செல்ல தயாராகி வருகிறார் ஊடகவியலாளர்கள் வினவியிருந்தனர்.

அப்போதே திருமதி டயானா கமகேவின் இல்லத்தில் ஜனாதிபதி ரணில், பொன்சேகா பேச்சு நடத்தவுள்ளாரென சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்வாறான கேடுகெட்ட வேலைகளை செய்யாமல் ரணில் தேவையெனில் ரணிலிடம் செல்லுங்கள் அல்லது கட்சியில் இருந்தால் இணைந்து செயல்படுங்கள்- என்று மரிக்கார் எம். பி. கூறினார். (ஐ)

# கெஹலியவுக்கு தொடர்ந்தும் மருத்துவ சிகிச்சை அவசியம்!

கொழும்பு, பெப். 19

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு மேலதிக மருத்துவ சிகிச்சை தேவை என மருத்துவர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

இதற்கமைய, சிறைச்சாலை வைத்தியசாலையில் அவருக்கு தொடர்ந்தும் சிகிச்சைகள் வழங்கப்படுமென சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மருத்துவ அறிக்கைகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம்யூனோகுளோபுலின் மருந்து இறக்குமதி தொடர்பில் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 7 பேரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்தை நீதிவான் லோச்சனா அபேவிக்ரம உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கட்டைக்காட்டில் கொல்லப்பட்ட 10 மீனவர்களின் நினைவேந்தல்!

வடமராட்சி, பெப். 19

வடமராட்சி கிழக்கு - கட்டைக்காட்டில் கடலில் மீன்பிடித்தவேளை கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 10 மீனவர்களின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

1994 பெப்ரவரி 18ஆம் திகதி அதிகாலை சுண்டிக்குளம் தொடுவாய் வாய்க்கால் கடலில் கட்டுமரங்களில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில் கடற்படையின் டோறா படகின் தாக்குதலில் 10 மீனவர்கள் கொல்லப்பட்டனர்.

இவர்களின் 30ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று ஞாயற்றுக்கிழமை கட்டைக்காடு சென். மேரிஸ் மைதானத்தில் நடைபெற்றது.

நினைவேந்தல் பொதுச் சுடரை கட்டைக்காடு பங்குத்தந்தை அமல் ராஜ் ஏற்றிவைத்தார். இதைத் தொடர்ந்து, உயிரிழந்த மீனவர்களின் உறவினர்கள் ஈகைச்சுடரை ஏற்றி, கண்ணீர் விட்டழுது தமது அஞ்சலியை செலுத்தினர்.

இந்த மீனவர்களின் நினைவாக வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ- 02)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அமெரிக்காவின் தடைகளை மீறி ரஷ்ய பொருளாதாரத்தை புடின் உயர்த்தியமை எப்படி?

பைசல் இஸ்லாம்



கடந்த 2022-ஆம் ஆண்டு மார்ச் மாதம் ரஷ்யாவின் நாணயமான ரூபிளின் மதிப்பு சரிந்தது. காஸ்ப்ரோம் மற்றும் ஸ்பெர்பேங்க் போன்ற பெரிய ரஷ்ய நிறுவனங்களின் மதிப்பு லண்டனில் 97 வீதம் வரை சரிந்தது.

மாஸ்கோவில் உள்ள ஏ.டி.எம். களுக்கு வெளியே நீண்ட வரிசைகளில் மக்கள் காத்திருக்கும் சூழ்நிலை உருவானது. சொகுசு படகுகள், கால்பந்து அணிகள், ஆடம்பர பங்களாக்கள் மற்றும் பெரிய தொழிலதிபர்களின் கடன் அட்டைகள் கூட பறிமுதல் செய்யப்பட்டன. ரஷ்யா கடுமையான பொருளாதார பின்னடைவைச் சந்தித்தது.

உக்ரேன் மீதான போருக்குப் பிறகு ரஷ்யா மீது பொருளாதார அழுத்தத்தை ஏற்படுத்த மேற்கத்திய நாடுகள் மேற்கொண்ட அசாதாரண முயற்சிகளின் விளைவு இது.

ரஷ்ய அரசாங்கத்தின் வெளிநாட்டு சொத்துகள் மற்றும் அந்நிய செலாவணி இருப்புகள் பறிமுதல் செய்யப்பட்டமை மிகப்பெரிய நடவடிக்கைகளில் ஒன்றாகும். இன்னும் துல்லியமாகச் சொல்வதானால், ரஷ்யாவின் மத்திய வங்கியின் கையிருப்பில் இருந்த 300 பில்லியன் அமெரிக்க டாலர்கள் முடக்கப்பட்டது தான் மிகப்பெரிய அதிர்ச்சி.

மேற்கத்திய நாடுகளின் அரசாங்கங்கள் "பொருளாதாரப் போர்" போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை தான், ஆனால் உண்மையில் அது ரஷ்யா மீது தொடுக்கப்பட்ட ஒரு பொருளாதாரப் போரைப் போலவே தோன்றியது. அணு ஆயுத நாடுகளுக்கு இடையிலான நேரடி போரை விட இது ஆற்றல்மிக்க ஒரு வழி.

### ரஷ்யாவின் பொருளாதாரம்

ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன, தற்போது பொருளாதார சூழ்நிலையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த வாரம் நடைபெற்ற ஒரு பிரபலமான நேர்காணலில், ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புடின் மிகுந்த மகிழ்ச்சியுடன் நீண்ட நேரம் பேசினார். மேலும், ரஷ்யாவின் பொருளாதாரம் ஐரோப்பா முழுவதிலும் வேகமாக வளர்ந்து வருவதாகக் கூறினார்.

கடந்த வாரம், சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எப்) ரஷ்யப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக் கணிப்பை 1.1 சதவீதத்திலிருந்து 2.6 சதவீதமாக உயர்த்தியபோது, அது ரஷ்யப் பொருளாதாரத்தின் வலிமையையும் எடுத்துக்காட்டியது.

ஐ.எம்.எப் தரவுகளின்படி, ரஷ்யாவின் பொருளாதாரம் கடந்த ஆண்டு அனைத்து ஜி-7 நாடுகளையும் விட வேகமாக வளர்ந்துள்ளது மற்றும் 2024-ஆம் ஆண்டிலும் நிலைமை அப்படியே தொடரும் என்று கூறப்பட்டுள்ளது. இவை வெறும் புள்ளிவிவரங்கள் அல்ல.

ரஷ்ய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன் மூலம் உக்ரேனில் நடந்து வரும் மோதல்கள் மற்றும் சிக்கலான சூழ்நிலையைத் தொடர ஆதரவு கிடைக்கிறது. உக்ரேனின் கிழக்கு மற்றும் தெற்கில் நடந்து வரும் சண்டையில் ரஷ்யாவின் ராணுவ முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன.

### இந்த வளர்ச்சியை ரஷ்யா தக்க வைத்துக் கொள்ளுமா?

ரஷ்யாவின் வளர்ச்சி நீண்ட காலம் நீடிக்காது என்று மேற்கத்திய தலைவர்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர். ஆனால் கேள்வி என்னவென்றால், அது எவ்வளவு காலம் நீடிக்கும்?

ரஷ்யா தனது பொருளாதாரத்தை ஒரு போர் பொருளாதாரமாக மாற்றியுள்ளது, அதில் பெரும்பாலான பணம் போருக்காக மட்டுமே செலவிடப்படுகின்றன. சோவியத் யூனியன் காலத்திற்குப் பிறகு முதல் முறையாக இவ்வளவு பெரிய தொகையை ரஷ்யா செலவிடுகிறது.


முழு பட்ஜெட்டில் 40 வீதம் இராணுவம் மற்றும் பாதுகாப்புக்காக செலவிடப்படுகிறது, இது சோவியத் யூனியன் சகாப்தத்தின் கடைசி ஆண்டுகளில் இருந்த நிலையை எட்டியுள்ளது. இது தவிர, டாங்கிகள், ஏவுகணை அமைப்புகள் மற்றும் உக்ரேன் பகுதிகளை பாதுகாப்பதற்கும் ரஷ்ய அரசாங்கம் பெரும் தொகையை செலவழித்து வருகிறது.

சுவாரஸ்யமாக, ரஷ்ய எண்ணெய் மற்றும் எரிவாயு மீதான மேற்கத்திய தடைகள் இருந்தபோதிலும், ஹைட்ரோகார்பன் பொருட்களின் விற்பனையின் வருவாய் இப்போதும் ரஷ்ய கருவூலத்தை நிரப்புகிறது.

எண்ணெய் டேங்கர்கள் இப்போது இந்தியா மற்றும் சீனாவை நோக்கி நகர்கின்றன. அமெரிக்க டாலருக்கு பதிலாக சீன நாணயமான யுவானில் பெரும்பாலான பணப்பரிமாற்றங்கள் நடக்கின்றன.

### 2024, புட்டினுக்கு சாதகமாக இருக்கும்

ரஷ்யாவின் எண்ணெய் உற்பத்தி இப்போதும் ஒரு நாளுக்கு 950 கோடி பீப்பாய்களாக உள்ளது, ஆனால் போருக்கு முன்பு இருந்ததை விட சற்று குறைவாகவே உள்ளது.



ரஷ்யா நூற்றுக்கணக்கான டேங்கர்களை ரகசியமாக வாங்கி, அவற்றை அனுப்பி வைத்தது. ரஷ்ய எண்ணெய், எரிவாயு மற்றும் வைரங்களின் மூலம் கிடைத்த வெளிநாட்டு பணமும், ரஷ்ய ரூபிளின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த உதவியது.

இது நீண்ட காலம் நீடிக்காது என்று மேற்கத்திய தலைவர்கள் கூறுகின்றனர், ஆனால் அதன் தாக்கம் குறித்து அவர்களுக்கும் தெரியும்.

ஓர் உலகத் தலைவர் சமீபத்தில் தனிப்பட்ட முறையில் கருத்துத் தெரிவித்திருந்தார், "2024 நாங்கள் நினைத்ததை விட புட்டினுக்கு மிகவும் சாதகமானதாக இருக்கும். தனது நாட்டின் தொழில்துறையை மறுசீரமைப்பதில் நாம் நினைத்ததை விட அவர் அதிகளவு வெற்றி பெற்றுள்ளார்."

### ரஷ்யாவின் உண்மை நிலை என்ன?

ஆனால், இந்த முறையிலான பொருளாதார வளர்ச்சியின் காரணமாக எண்ணெய் வருமானம் மற்றும் சீனாவைச் சார்ந்திருக்க வேண்டிய தேவை ரஷ்யாவுக்கு உருவாகியுள்ளது. போரில் தேவையற்ற செலவினங்களையும் இது அதிகரித்துள்ளது.

எண்ணெய் மற்றும் எரிவாயு தேவை உச்சத்தை அடைந்த பிறகு, எண்ணெய் உற்பத்தியில் போட்டி நாடுகளாக இருக்கும் அரபு வளைகுடா நாடுகளின் உற்பத்தி பற்றிய தகவல்களும் அடுத்த ஆண்டு ஆன்லைனில் வந்தவுடன், ரஷ்யாவின் யதார்த்தம் தெரியும்.

கிழக்கு உக்ரேனில் போரில் பயன்படுத்தப்படும் டாங்கிகள் மற்றும் வெடிமருந்துகளின் உற்பத்தியின் அதிகரிப்பு காரணமாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அதிகரித்து வருகிறது, ஆனால் இது ரஷ்யாவிற்கு நிரந்தரமாக எதையும் கொடுக்காது.

இதற்கிடையில், ரஷ்யாவின் பல குடிமக்களும் தங்கள் நாட்டின் செயல்பாடுகளால் ஏமாற்றத்தில் உள்ளனர்.

ரஷ்ய பொருளாதாரத்தை முற்றுகையிடுவது அல்ல மேற்கத்திய நாடுகளின் உத்தி. மாறாக, அவர்கள் ரஷ்யாவை ஒரு குழப்ப நிலைக்குள் தள்ள விரும்புகிறார்கள். அதாவது தொழில்நுட்ப வசதிகளைக் கட்டுப்படுத்துவது, நாட்டின் வருமானத்தை கட்டுப்படுத்துவது, பணவீக்கத்தை அதிகரிப்பது.

இனியும் இதை தாங்கிக்கொள்ள முடியாது என்ற நிலையை உருவாக்குவதே அந்த யுக்தி.

### கச்சா எண்ணெய் சந்தைகள்

ஒரு அமெரிக்க அதிகாரி என்னிடம் கூறினார், "ரஷ்யா தனது பணத்தை டாங்கிகளுக்கு பதிலாக எண்ணெய் டேங்கர்களை வாங்குவதற்கு பயன்படுத்த வேண்டுமென விரும்புகிறோம்."

உதாரணமாக, எண்ணெய் சந்தை

(16ஆம் பக்கம் பார்க்க)






# இந்தியா மட்டுமல்ல உலகம் முழுவதும் நடக்கும் விவசாயிகள் போராட்டம் - எதற்காக?

இந்தியாவில் மீண்டும் ஒருமுறை மத்திய அரசுக்கெதிரான விவசாயிகள் போராட்டம் தொடங்கியுள்ளது. குறிப்பாக பஞ்சாப் மற்றும் ஹரியாணாவைச் சேர்ந்த விவசாயிகள் டெல்லியை நோக்கி பேரணியாக சென்றுக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், இந்த முறை இந்தியா மட்டுமல்லாது, உலகளவில் பல்வேறு நாடுகளிலும் விவசயிகள் போராட்டட்டங்கள் ஒரே நேரத்தில் நடைபெற்று வருகின்றன.

சமீபத்தில் ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள புதிய விதிகள் மற்றும் அதிகரித்து வரும் பணவீக்கம் காரணமாக போலந்து, ஸ்பெயின், ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவை சேர்ந்த விவசாயிகளும் போராட்டத்தில்





ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நாடுகள் அனைத்திலும் முக்கிய நகரங்களின் பிரதான சாலைகளை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வருகின்றனர் விவசாயிகள்.

ஆனால், எதற்காக இந்த விவாயிகள் போராடி வருகின்றனர்? அதற்கான காரணம் என்ன? ஐரோப்பியா மற்றும் இந்திய விவசாயிகளின் கோரிக்கைகள் இரண்டும் ஒன்றா?

**எந்தெந்த நாடுகளில் விவசாயிகள் போராட்டம் நடக்கிறது?**

மேற்கு போலந்தை சேர்ந்த போஸ்னான் நகரின் சாலைகள் முழுதும் 1,400-க்கும் மேற்பட்ட டிராக்டர்களோடு விவாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த சில மாதங்களாகவே போலந்து, ஹங்கேரி, பிரான்ஸ், ஸ்பெயின், பெல்ஜியம், இத்தாலி, ருமேனியா ஆகிய நாடுகளில் விவசாயிகளின் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

அவர்களது போராட்ட முறை ஒரே மாதிரியனதாக இருந்தாலும் கூட, ஒவ்வொரு நாட்டு விவசாயிகளுக்கும் கோரிக்கை வேறு வேறானதாக இருக்கிறது.

ஸ்பெயினை சேர்ந்த விவசாயிகள் சில முக்கிய நகரங்களுக்குள் நுழைய முயற்சி செய்துள்ளனர். ஹங்கேரிய விவசாயிகள் உக்ரேனிலிருந்து ஐரோப்பாவுக்குள் வரும் விவசாய பொருட்களை தடுத்து நிறுத்துவதற்காக டிராக்டர்களோடு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரான்ஸ் மற்றும் பாரிஸை சேர்ந்த நூற்றுக்கணக்கான விவசாயிகளும் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், ஐரோப்பா முழுவதிலும் உள்ள விவசாயிகள் இந்த போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

**ஐரோப்பிய விவசாயிகளின் முக்கிய கோரிக்கைகள் என்ன?**

ஐரோப்பாவில் உள்ள விவசாயிகள் நான்கு முக்கிய பிரச்னைகளை முன் வைக்கின்றனர். விவசாயத்தில் ஏற்பட்டுள்ள விலை உயர்வு. விவசாயத்தில் அதிகரித்து வரும் அரசின் தலையீடு.

பசுமை ஒப்பந்தத்தின் கீழ் ஐரோப்பிய ஒன்றியம் விவசாயிகள் மீது விதித்துள்ள விதிமுறைகள்.

ஐரோப்பா அல்லாத நாடுகளில் இருந்து இறக்குமதி அதிகரிப்பதால் உள்நாட்டு விளைபொருட்களின் விலை குறைவு.

ஐரோப்பாவைச் சேர்ந்த ஒவ்வொரு நாட்டு விவசாயிகளுக்கும் வெவ்வேறு பிரச்னைகள் உள்ளன. போலந்து மற்றும் ஹங்கேரியை சேர்ந்த விவசாயிகளுக்கு உக்ரைனிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மலிவு விலை விவசாய பொருட்களை தடுக்க வேண்டும்.

அதிக இறக்குமதியின் காரணமாக உள்ளூர் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை என்பதே அவர்களது வாதம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவுக்கு எதிராக ஸ்பெயினை சேர்ந்த விவசாயிகளும் போராட்டம் நடத்தியுள்ளனர்.

கிரீஸ் நாட்டைச் சேர்ந்த விவசாயிகள், மின்கட்டணம் குறைப்பு, டீசல் வரி ரத்து மற்றும் கால்நடைத் தீவனத்திற்கு மானியம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைக்கின்றனர்.

இத்தாலியை சேர்ந்த விவசாயிகள் வருமான வரியில் இருந்து தங்களுக்கு




வழங்கப்பட்டிருந்த விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டுள்ள முடிவை எதிர்த்து போராடி வருகின்றனர்.

போலந்து விவசாயிகள் மொத்தம் 256 இடங்களில் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

அங்கு விவசாயிகள் கையில் கொடிகளை ஏந்திக்கொண்டு முக்கியமான சாலைகளை முற்றுகையிட்டுள்ளனர். அதன் ஒருங்கிணைப்பாளர்கள் கூற்றுப்படி, போஸ்னனில் மட்டும் 6,000 விவசாயிகள் கூடியுள்ளனர்.

இந்த விவசாயிகள் பட்டாசு வெடிப்பது மற்றும் குப்பைகளை சாலையில் கொட்டி தங்களது போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம் கார்பன் உமிழ்வு மற்றும் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை குறைக்கும் நோக்கத்தில் பூச்சிக்கொல்லி மருந்துகளை 50 வீதம் குறைக்க முடிவு செய்தது. ஆனால், விவசாயிகளின் எதிர்ப்பால் அந்த முடிவு திரும்ப பெறப்பட்டது. இருப்பினும், 2040-க்குள் கார்பன் உமிழ்வை 90 வீதம் கட்டுப்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது ஐரோப்பிய ஒன்றியம்.

ஸ்பெயினில் நான்காவது நாளாக பல்வேறு பகுதிகளில் சாலை மறியல் போராட்டம் நடந்து வருவதால், பில்பாவ் போன்ற முக்கிய நகரங்களில் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது.

இந்நிலையில் இந்தியாவைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது முக்கிய கோரிக் கைகளாக குறைந்தபட்ச ஆதாரவிலை உத்திரவாதம் மற்றும் எம்.எஸ். சுவாமி நாதன் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும் உள்ளிட்டவற்றை முன்வைத்துள்ளனர்.

ஒருவகையில் ஐரோப்பாவில் போராடி வரும் விவசாயிகளின் கோரிக்கையில் இருந்து இது மாறுபட்டதாக உள்ளது.

**டெல்லியில் போராடும் விவசாயிகளின் கோரிக்கைகள் என்ன?**

குறைந்தபட்ச ஆதார விலைக்கான தனிச்சட்டம்.

எம்.எஸ்.சுவாமிநாதன் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும்.

2020-2021-ஆம் ஆண்டுகளில் போராடிய விவசாயிகள் மீது போடப்பட்டுள்ள வழக்குகள் ரத்து செய்யப்பட வேண்டும்.

லக்கிம்பூர் கேரி வழக்கின் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

மாசுக்கட்டுப்பாட்டு சட்டத்தில் விவசாயிகளை சேர்க்கக் கூடாது.

விவசாயிகளுக்கு உடனடி கடன் தள்ளுபடி வழங்க வேண்டும்.

58 வயதுக்கு அதிகமான விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

இந்தாண்டு (2024) இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் தேர்தல் நடைபெற உள்ளது. ஐரோப்பிய நாடுகள் இந்தியா போல விவசாயத்தை சார்ந்த நாடுகள் இல்லையென்றாலும் கூட, அங்கு விவசாயிகளால் அரசியலில் செல்வாக்கு செலுத்த முடியும்.

எனவே உலகம் முழுவதும் போராடி வரும் விவசாயிகளின் அடுத்தகட்டம் என்ன? இதனால் உலக அரசியலில் தாக்கம் ஏற்படுமா?

இந்த போராட்டங்களினால் இந்தியா, அமெரிக்கா, மற்றும் ஐரோப்பா நாடுகளின் அரசியலில் ஏற்படும் தாக்கம் இன்னும் சில நாட்களில் தெரிந்துவிடும். •



# அமெரிக்காவின் தடைகளை மீறி....

தொடர்பான கொள்கைகளின் நோக்கம் என்பது, ரஷ்ய எண்ணெயை இந்தியா வாங்குவதைத் தடுப்பது அல்ல. மாறாக, ரஷ்யாவுக்கு எண்ணெய் விற்பதன் மூலம் கிடைக்கும் லாபத்தைக் கட்டுப்படுத்து வதே இதன் நோக்கமாகும்.

ஆனால் ரஷ்யாவின் இந்த ஸ்திரத்தன்மையும் வலிமையும் குறைந்தது இந்த ஆண்டு இறுதி வரை தொடரும் என்று நம்பப்படுகிறது. இந்த நேரத்தில், அமெரிக்க அதிபர் தேர்தல் நடத்தப்படும், அரசாங்கமும் மாறக்கூடும்.

உக்ரேனுக்கு மேற்கத்திய நிதியுதவி குறையும் வாய்ப்பும் உள்ளது. அத்தகைய சூழ்நிலையில், இது நிச்சயமாக ரஷ்யாவுக்கு உதவும்.




இதனால் தான் ஆயிரக்கணக்கான கோடி டாலர்கள் மதிப்பிலான முடக்கப்பட்ட நிதிச் சொத்துக்களின் மீது கவனம் திரும்பியுள்ளது.

**முடக்கப்பட்ட சொத்துக்கள்**

“உலக நாடுகளிடம் 30,000 கோடி டாலர்கள் மதிப்பிலான ரஷ்யாவின் முடக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் இருந்தால், அதை ஏன் பயன்படுத்தக் கூடாது,” என்று உக்ரேன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி கடந்த மாதம் என்னிடம் கூறினார். பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து நிதியும் உக்ரேனின் மறுசீரமைப்புக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்றார்.

பிரிட்டனின் அதிபர் ஜெரமி ஹன்ட் மற்றும் வெளியுறவு அமைச்சர் டேவிட் கேமரூன் ஆகியோரும் இந்த நடவடிக்கையை ஆதரித்தனர்.

கேமரூன் என்னிடம், “இந்தச் சொத்துக்களை நாங்கள் கைப்பற்றியுள்ளோம். அவற்றைப் பயன்படுத்துவோமா என்பதுதான் கேள்வி,” என்றார்.

“இப்போது இந்தப் பணத்தில் ஒரு பகுதியைப் பயன்படுத்துவது யுக்ரேன் மீதான ரஷ்யாவின் சட்டவிரோத ஆக்கிரமிப்பிற்கு ஈடுசெய்ய முன்பணமாகச் செலுத்தப்படும். மேலும் இது உக்ரேனுக்கு உதவவும் மேற்கத்திய நாடுகளின் வரிப் பணத்தை சேமிக்கவும் பயன்படுத்தப்படலாம்,” என்று கேமரூன் சுட்டிக் காட்டுகிறார்.



ஜி-7 நாடுகள் அந்தந்த மத்திய வங்கிகளின் இயக்குநர்களிடம் தொழில்நுட்ப மற்றும் சட்டப் பகுப்பாய்வைத் தயாரிக் குமாறு கேட்டுள்ளன. இந்தப் பிரச்னை அவரை மிகவும் தொந்தரவு செய்வதாகக் கருதப்படுகிறது.

**ரஷ்ய சொத்துகளை பயன்படுத்துவ தன் அபாயங்கள்**

முடக்கப்பட்ட சொத்துகளை டாலர்களாக மாற்றிப் பயன்படுத்துவதில் ஆபத்துகள் இருப்பதாக ஒரு சிறந்த நிதியாளர் என்னிடம் கூறினார். பாரம்பரியமாக, மத்திய வங்கிகளுக்கு அத்தகைய நடவடிக்கையிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன.

உக்ரேனுக்கு பில்லியன் கணக்கான டாலர்கள் கிடைக்கும் வகையில் ரஷ்ய நிதியைப் பயன்படுத்த அல்லது முதலீடு செய்ய ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ரஷ்யாவின் சொத்துக்கள் கையகப்படுத்தப்பட்டால் அது மற்ற நாடுகளுக்கு என்ன செய்தியை கூறும்? முக்கியமாக வளைகுடா, மத்திய ஆசியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் உள்ள மேற்கத்திய நாடுகளின் மத்திய வங்கிகளின் நிதி இருப்புக்களின் பாதுகாப்பு குறித்து.

இந்த உறவுகள் சர்வதேச நிதி அமைப்புக்கு இன்றியமையாதவை. உலகம் முழுவதும் நூற்றுக்கணக்கான பில்லியன் டாலர்களை ஆற்றல் தொடர்பான தயாரிப்புகளில் முதலீடு செய்ய இந்த நிதி பயன்படுகிறது.

**உலக பொருளாதாரம்**

உலகில் வளர்ந்து வரும் பொருளாதாரங்களுக்கு சீனா ஒரு மாற்றாக இருப்ப தைக் காட்ட முயற்சித்துள்ளார் புடின்.

ரஷ்யாவின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டால், சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பதிலுக்கு ரஷ்ய வங்கிகளில் உள்ள மேற்கத்திய நிறுவனங்களின் சொத்துக்களும் கைப்பற்றப்படும் என்றும் ரஷ்யா சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, இந்த மோதலும் உலகப் பொருளாதாரமும் எதை நோக்கிச் செல்கிறது என்பதைப் புரிந்துகொள்ள ரஷ்யாவின் பொருளாதாரத்தின் மீதான மேற்கத்திய நாடுகளின் நிழல் யுத்தம் இன்றியமையாதது.

ரஷ்யாவின் போர் பொருளாதாரம் நீண்ட காலம் நீடிக்க முடியாது, ஆனால் அது குறைந்தபட்சம் நாட்டிற்கு சிறிது அவகாசத்தை கொடுத்துள்ளது. ரஷ்யா இதில் உறுதியாக நிற்கும் விதத்தில், மேற்கத்திய நாடுகளின் நடவடிக்கை மேலும் தீவிரமடையலாம்.

இந்த நிதி சார்ந்த போர் எந்த வடிவத்தை எடுத்தாலும், அதன் தாக்கம் ரஷ்யாவிற்கும் உக்ரேனுக்கும் அப்பால் இருக்கும்.

